பக்கங்கள்-16 10,வைகாசி2020




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -297



## தமிழ் தலைவர்களை ஒன்றிணைக்கும் அதிகாரம் கொண்ட தமிழ் அரசியல் குழு உருவாக்கப்பட வேண்டும் - இல்லையேல் ஆபத்து!



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட வேண்டியதன் அவசியம்





## கொரோனா வைரஸை வைத்து மதவாதத்தை உருவாக்கும் மதவாதிகள்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகள் தமிழினத்தை எங்கே கொண்டு செல்லப்போகின்றது?



காலத்திற்கு காலம் அரசியல் மாற்றங்கள் ஏற்படுவது வழமை. அந்த அடிப்படையில் கடந்த காலங்களை பார்க்கும் பொழுது போர் உச்சகட்டத்தை நெருங்கிய நிலையில் இயற்கைத்தாக்கமான சுனாமி அனர்த்தம் மக்களை வெகுவாரியாக பாதித்தது. இதன் போது சுனாமி கட்டமைப்பு ஒன்று நிறுவப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்தே அரசாங்கம் அதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்தியது. அதன் பின் படிப்படியாக ஆங்காங்கே தமிழ் நிலப்பிரதேசங்களில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே சிறு சிறு மோதல்கள் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் மாவிலாறில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்றது.

அதன் பின்னர் மக்கள் ஓரளவேனும் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப ஏழு ஆண்டுகள் பிடித்தது. இன்னும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்புக்கள் என்பன இடம்பெற்றுக்கொண்டே இருக்கிறது. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 10 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கான வடகிழக்கு இணைந்த தாயகத்தை மீட்கும் பொருட்டு அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் விடுதலை, வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்பட வேண்டும். தேசியம், சுயநிர்ணய உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற தூர நோக்கோடு தமிழ் தேசிய கூட்டமைப்பு பயணித்துக்கொண்டிருக்கிறது.

ஆனாலும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எழுப்பப்பட்டுள்ள கேள்விகள் மக்களாலும் அரசியல் தலைஞர்களாலும் ஏராளம் முன்வைக்கப்படுகின்றன. ஆகவே த.தே.கூட்டமைப்பு மக்களுக்கான சரியான பாதையில் பயணிக்கவில்லை என்பதை எடுத்துக்கொள்வதா? இருந்த போதும் த.தே.கூட்டமைப்பானது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமானது தலைவரான பிரபாகரனால் ஊடகவியலாளர் சிவராமின் உதவியுடன் உருவாக்கப்பட்டது. அதனது தொடர்ச்சியாக த.தே. கூட்டமைப்புக்கே வடகிழக்கில் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து வெற்றி பெற செய்தனர். இதனால் இவர்கள் 16 ஆசனங்களை கைப்பற்றி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் இருந்து வெளியேறினார்கள் இதுவொரு வரலாறு.

இந்த சூழ்நிலையில் தொடர்ச்சியாக த.தே.கூட்டமைப்பு உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல், பொதுத் தேர்தல் என பல தேர்தல்களை சந்தித்து அதில் வெற்றியும் பெற்றுள்ளது. ஆனால் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர்கள் குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல். எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலை கூட்டமைப்பின் தலைவன் வி. ஆனந்த சங்கரி, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் என்னும் புதிதாக முளைத்த அரசியல் கட்சிகள் எல்லாம் த.தே.கூட்டமைப்பின் தலைமைகள் பற்றி கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். இவர்கள் அனைவரும் த.தே.கூட்டமைப்பில் இருந்து பிரிந்து வந்தவர்கள். அதில் இருந்த காலத்தில் எதையும் சாதிக்கவில்லை. இவர்கள் அனைவரும் அப்பொழுது த.தே.கூட்டமைப்பில் பதவிகளில் இருந்தவர்கள். தற்பொழுது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு என்பது போல் இவர்களின் நடவடிக்கை அமைகிறது. கூட்டமைப்பு தவறு செய்கிறது என்றால் அதன் தலைமைகளை மாற்றியமைப்பதன் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். தங்களுக்கு சாதகமான நிலைமைகளை எட்டவேண்டும் என்பதற்காக ஒரு காலத்தில் அரசாங்கத்துடன் இணைந்து செற்பட்ட குரோத கும்பல்கள் தற்பொழுது த.தே.கூட்டமைப்பிற்கு சேறு பூசும் செயற்பாடாகவே அமைகிறது.

கடந்த வாரம் பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கொழும்பில் வைத்து சந்தித்த போது தமிழ் தேசிய கூட்டமைப்பினர் விலை போய் விட்டதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது. இந்த நிலையில் எதிர்க்கட்சியினர் பங்கேற்கவில்லை. ஆக மொத்தத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மகிந்தவுடன் கள்ளத்தொடர்பு வைத்திருப்பதாக முன்னாள் வட மாகாணசபையினுடைய மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் குறிப்பிட்டுள்ளார். இவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரிந்து சென்ற கட்சிகள் ஒவ்வொன்றும் இணைந்து ஒரு கூட்டணியை உருவாக்கியிருந்தது. முதலாவது தமிழ் மக்கள் பேரவை, அடுத்து எழுக தமிழ் என்பதனை உருவாக்கியது. அடுத்து பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணையும் ஒரு நிலைப்பாட்டை உருவாக்கியது. அதுவும் தோல்வியில் முடிவடைந்தது.

காரணம் த.தே.கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட மாற்றுக்கட்சிகள் ஒவ்வொன்றும் அதன் தலைமைகள் சரியான முறையில் உருவாக்கப்படவில்லை என்பதே ஆகும். இன்றும் கூட இக்கட்சிகளால் ஒரு சரியான தலைமையை உருவாக்கமுடியாமல் போயுள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தற்பொழுது உலகம் முழுவதும் கொரோனா வைரஸினுடைய தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என பல நாடுகளும் துடியாய் துடித்துக்கொண்டிருக்கிறது. இன்னும் மக்களிடையே சுகாதாரத்தை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மட்டுமே ஆலோசனைகள் வழங்கப்படுகிறதே தவிர கொரோனாவை கட்டுப்படுத்தும் மருத்துவ வில்லைகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையை பொறுத்தவரையில் ஓரளவேனும் மரணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் அனைத்து கட்சிகளுக்குமான சந்திப்பு ஒன்றுக்காக பிரதமர் அழைப்பு விடுத்திருந்தார். இதில் கூட்டமைப்பு பங்கு பற்றியது என்பது தவறு என்று மக்கள் மத்தியில் காண்பிக்க முட்படுபவர்கள் தாம் சரியான பாதையில் பயணிக்கின்றார்களா என்பது பற்றி தெளிவுபடுத்த வேண்டும். வெறுமனே தேசியம் சுயநிர்ணயம் என்று மட்டும் பேசிவிட்டால் போதாது. அதனை நடைமுறைப்படுத்துவதில்தான் சிக்கல்கள் உள்ளன. தற்போதைய காலகட்டத்தின் தேவை வைரஸை கட்டுப்படுத்தி மக்களை இயல்பு வாழ்க்கைக்கு திருப்பி பொருளாதார வளர்ச்சியை இலங்கையில் கட்டியெழுப்புவதே ஆகும். இதனை விடுத்து விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டு செல்வது வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய இன குரோதத்தை ஏற்படுத்தும். சுவர் இருந்தால் மாத்திரமே சித்திரம் வரையமுடியும் என்ற அடிப்படையில் எமது இருப்பினை முதலில் உறுதிப்படுத்திக்கொண்டு அடுத்தகட்ட நகர்வுகளை அரசியல் ரீதியாக முன்னெடுப்பதே சிறந்தது. தேர்தல் அரசியலை இதனூடாக முன்னெடுக்க விரும்புகின்ற அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களினுடைய நலனில் அக்கறை அற்றவர்களாகவே கருத வேண்டும். கொரோனாவிற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கி அதனை முற்றாக இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது இதனை குழப்புகின்ற செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் கூட சுனாமி கட்டமைப்பு ஒன்றை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுத்தினார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இன்றைய காலத்தின் தேவை கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவது தான். இதனை உருவாக்கிய அல்லது பரப்பிவிட்ட சீன நாட்டிற்கு எதிராக இந்த அரசியல் கட்சிகளும் சரி, நாட்டின் தலைவர்களும் சரி குரல் கொடுக்கின்றார்களா? இல்லை. நிச்சயமாக விடுதலைப்புலிகளின் கட்டமைப்பு தற்பொழுது இயங்கிக்கொண்டு இருக்குமாக இருந்தால் சீன நாட்டுக்கு எதிராக போர்க்கொடி தூக்கப்பட்டிருக்கும். உலக வரைபடத்தில் சீனா என்ற ஒரு நிலைமையை இல்லாமல் ஆக்கியிருக்கும். மொத்தத்தில் அனைத்து நாடுகளும், அனைத்து தரப்பு கட்சிகளும் ஒன்றிணைந்து கொடிய வைரஸை பரப்பிய சீன நாட்டுக்கு எதிராக போர்க்கொடி தூக்குவதே காலத்தின் தேவைகளில் ஒன்று. பொருளாதாரம் முடங்கிப்போயுள்ள நிலையில் அதனை கட்டியெழுப்புகின்ற தேவை நாட்டிலுள்ள அனைவருக்கும் உரித்தானது. இதற்குள் அரசியல் என்பது திணிக்கப்படக்கூடாது. பாராளுமன்றத்தை கூட்டுவதோ அல்லது தேர்தலை நடத்துவதோ என்பது இங்கு பிரச்சனையல்ல சுகாதார அதிகாரிகளின் வழிநடத்தலின் கீழ் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதே மிக முக்கியமானதாகும். ஆகவே த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களை பிழையான வழியில் இட்டுச்செல்கின்றது என்ற விமர்சனங்கள் பொருந்துமா என்பதை மேற்குறிப்பிட்ட கட்சிகள் தங்களின் விமர்சனங்களை மீள் பரிசோதனை செய்து கொள்வது முக்கிமானது.

-சுழியோடி-

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனாவை கட்டுப்படுத்தியதன் பின்னரே அரசியல் பற்றி பேசுவது சிறந்தது

தமிழில் ஒரு புழமொழி இருக்கிறது ஆடறுப்பதற்கு முன் – அறுக்க நினைப்பது தவறு. இந்த புழமொழி அனைத்து அரசியல்வாதிகளுக்கும் விளங்கும். அந்த வகையில் இன்றைய உலக நீரோட்டத்திற்கேற்ப அரசியல் செற்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகிறதா? இதற்காக ஏன் பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும்? அதற்கு முன்னர் ஒன்றிணைந்து கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் என்ன? பாராளுமன்றத்தை கூட்டி செயற்பட வேண்டும் என்கின்ற ஒரு சாராரின் கருத்து தென்னிலங்கை அரசியலில் பாரிய பிளவுகளை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

தமிழ் மக்களுடைய அபிலாசைகள், சிங்கள மக்களுடைய அபிலாசைகள் என்று அன்றிலிருந்து இன்று வரை பார்க்கும் பொழுது தமிழ் மக்களுக்காக தமிழீழம் நிறுவப்பட வேண்டும் என்று குறியாக இருக்கிறார்கள், அது போன்று சிங்கள மக்கள் இந்த நாட்டை பிரிக்க கூடாது என்று குறியாக இருக்கிறார்கள். ஆகவே ஒரு விடயத்தை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். தற்பொழுது என்ன பிரச்சனை இருக்கிறது அதற்காக என்ன தீர்வுகளை எடுக்க வேண்டும் என்பதை தெரிந்திருக்க வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்.

தற்பொழுது உலக நாடுகளே தத்தளித்துக்கொண்டிருக்கின்ற வேளையில் தமிழ் மக்களுக்கான காணி விடுவிப்பு அபிவிருத்தி போன்றவற்றை பேசிக்கொண்டிருப்பதில் எந்தவித இலாபமும் இல்லை. அரசாங்கம் அதை பெற்றுத்தரப்போவதுமில்லை. தற்பொழுது தேர்தல் அரசியல் பேசுவது என்பது ஏற்றுக்கொள்ளப்படமுடியாததொன்று. யூன் 20 ஆம் திகதியும் தேர்தல் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்களுடைய பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டிலுள்ள பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்பப்படாத பொழுது தொடர்ந்தும் மக்கள் கடன் பிரச்சனையில் மூழ்க வேண்டிவரும். ஏற்கனவே பல கம்பனிகளால் கடன் தொல்லையினால் தூக்கிலிட்டு பலர் இறந்திருக்கிறார்கள். இவர்களுக்கான சரியான வருமானங்களை ஈட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இன்னமும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிய நிவாரணங்கள் வழுங்கப்படவில்லை.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் வழுங்கப்படவில்லை. தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் கொரோனா தொற்று வருவதற்கான சாத்தியங்கள் உண்டு. இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்ற நடைமுறை சாத்தியமற்றவர்களாகவே அரசியலை முன்வைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நிவாரணப் பொருட்களை அரசியல்வாதிகள் வழுங்குகின்றார்கள். வழுங்குவதற்கான தேவையும் இருக்கிறது. அல்லது போனால் அவர்கள் அரசியல்வாதிகள் இல்லையென்றும் கூறுகின்றார்கள். வாக்கு கிடைத்துவிடுமோ என்ற பயத்தினால் அரசியல்வாதிகள் ஒருசிலரும் இருப்பது வித்துச்சுத்து மக்களுக்கு நிவாரணம் வழுங்குகின்றார்கள். அது தவறில்லை ஆனால் தற்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டு செல்வது அரசாங்கத்திற்கு சாதகமான ஒரு விடயத்தை தோற்றுவிக்கும். பௌத்த பிக்குகள் மீண்டும் போர்க்கொடி தூக்குவார்கள். 30 ஆண்டுகள் நடைபெற்ற போராட்டத்தின் கால இடைவெளிகள் கூட தமிழ் மக்களுக்கான சாதகமான தீர்ப்பை பெற்றுத்தரவில்லை.

போராட்டத்தின் உச்சம் தந்த பரிசு போராட்டங்கள் அழிக்கப்பட்டது தான் வரலாறு. ஆனாலும் அரசாங்கம் தற்பொழுது தமிழ் தலைமைகளினுடைய அரசியல் தலைமைகளினால் பெரும் தொல்லையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வு வழுங்குவதில் அவர்களுக்கு பாரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. சிங்கள தேசத்தில் மாறிமாறி வந்த கட்சிகள் எல்லாம் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றத்தையும் மனித படுகொலைகளையுமே அவர்கள் நடத்தி வந்தார்கள்.

இந்த நிலையில் சாணக்கியமான ஒரு அரசியலை மேற்கொள்வதனூடாகவே இதற்கான ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான சூழ்நிலையில் கடந்த கால அரசியல் அனுபவங்களை கொண்டு செயற்படுவதன் ஊடாகவும் தற்பொழுது நடைமுறை சாத்தியத்திலுள்ள அரசியலை வென்றெடுப்பதன் ஊடாக மட்டுமே தமிழ் மக்களுக்கான தீர்வை வென்றெடுக்க முடியும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**104**

இதற்கு மேலதிகமாக நீர் புகாத நைலோன் விரிப்பும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. காமாக்கைப்பூரணமாகமூடக்கூடிய அளவில் நைலோன் விரிப்புத் தயாரிக்கப்படுகின்றது. இதனது நான்கு முனைகளும் கயிற்றால் கட்டப்பட்டு வேறு ஏதாவது பொருட்களோடு கட்டப்படும். விரிப்பின் கீழ் அதன் மையத்தில் இன்னொரு கயிறு கட்டப்படும். ஆதன் நுனி கமாக் கட்டப்பட்டுள்ள மரத்தோடு கட்டப்படும். மழை பெய்கின்ற சமயங்களில் விரிப்பின் கயிற்று நுனிகள் அருகிலுள்ள சிறு பற்றைகளில் கட்டப்படும். இவ்வாறாகச் சிறிய இராணுவக்கூடாரம் பெறப்படுகின்றது. இதன் மையத்திலுள்ள கயிறு மழைநீர் வழிந்தோட உதவுகின்றது.

அடுத்து அவசியமானது போர்வை. ஏனெனில், மலைப்பகுதிகளில் இரவு வந்ததும் மிகவும் குளிராக இருக்கும். அத்துடன் குளிருக்கான மேலங்கியும் (யக்கற்) வைத்திருக்க வேண்டும். இது சடுதியான வெப்பநிலை மாற்றங்களைத் தாங்குவதற்கு உதவுகின்றது. கெரில்லாவின் உடைகள் நீளக்காட்சட்டை, கடின வேலைக்கான சேட், உடற்பயிற்சிக்கான உடை அல்லது ஏதாவது பிறி தொரு உடை ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். குாலணி திடமானதாக இருக்க வேண்டும். சேமிப்பில் அவசியம் இருக்க வேண்டிய முதல்தரப் பொருளாக சப்பாத்து விளங்குகின்றது. ஏனெனில், சப்பாத்தில்லாமல் நகர்வது மிகக்கடினமாகும். கேரில்லா தனது வாழ்விடத்தை தோள்மூட்டிலுள்ளபொருட்பையில் சுமந்தவாறிருப்பான். பொருட்பை அதிகூடிய முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். மிகவும் எளிதான பையை சாதாரண சாக்கிலிருந்து, சணல் கயிற்றால் அதனைக் கட்டித் தயாரிக்கலாம். ஆனால், சந்தைகளில் கிடைக்கக்கூடிய தார்ச்சீலைப் பையை அல்லது உல்லாசப்பயண முதுகுப்பையை வைத்திருப்பதே சிறந்தது. படைப்பிரிவு வைத்திருக்கின்ற பொதுவான உணவுப்பொருட்கள் தவிர, கெரில்லா எப்பொழுதும் தன்னுடன் செலவிடாத உணவுப்பொருட் சேமிப்பை வைத்திருக்க வேண்டும். ,வற்றில் முதலாவதாக, உடலுறுப்பிற்கு மிக முக்கியமான மிருக அல்லது தாவரக்கொழுப்பு உணவு தயாரிக்கச் சாத்தியமற்ற சூழ்நிலையில் அல்லது நகர்விற்குக் கடினமாகப் பொருட்பையில் தேவைக்கதிகமாக பதனிட்ட பொருட்கள் இருக்கின்ற நிலையில் பயன்படுத்தப்படும் டப்பாவிலடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் உயர் உட்கொள்ளும் தரத்தினைக் கொண்ட பதப்படுத்தப்பட்ட மீன்கள் சுவையானதும் கூடியளவில் குளுக்கோசைக் கொண்டிருக்கின்றதுமான கெட்டியாக்கப்பட்ட பால் (பாலமாவையுங் கூட வைத்திருக்கலாம்) போன்றன உள்ளடக்கப்படுகின்றன. சீனியும் உப்பும் – கெரில்லாக்களின் உணவுப் பொருட் சேமிப்பில் முக்கியமான உணவுப்பொருட்களாகும். இவையில்லாமல் சமாளிக்க முடியாது. உணவுப்பொருட்களுக்கான சில வாசனைப்பொருட்களைத் தன்னுடன்வைத்திருப்பதும்நல்லது. இவற்றில் மிகவும் பிரபல்யமானவை  வெங்காயமும் உள்ளியுமாகும். நாட்டின் சிறப்பம்சங்களைப் பொறுத்து ஏனைய வாசனைப்பொருட்களையும் வைத்திருப்பது சாத்தியமாகும். இவையே பிரதானமான உணவுப்பொருட்களாகும். சாப்பாட்டுத் தட்டு, கரண்டி, வேட்டைக் கத்தி போன்ற பல் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கெரில்லா கொண்டிருக்க வேண்டும். சாப்பாட்டுத் தட்டுக்குப் பதிலாக பேசின், பானை அல்லது பதப்படுத்திய உணவுப்பொருள் டப்பாவைப் பயன்படுத்தலாம். இவற்றை உணவு தயாரிப்பதற்காகவும் பயன்படுத்தலாம். அதாவது இறைச்சி, உருளைக்கிழங்கு போன்றவற்றைப் பொரிப்பதற்கும் தேநீர் அல்லது கோப்பி தயாரிப்பதற்குமாகும். ஆயுதத்தை ஒழுங்குமுறையில் அவதானமாகத் துப்பரவு செய்யவும் எண்ணெய்த் துப்பரவு செய்யவும் வேண்டும். இதற்காக ஆயத எண்ணெய் (இது இல்லாதவிடத்து தையல் இயந்திர எண்ணெயைப் பயன்படுத்தலாம்), அத்துடன் சந்தியும் குழல் சுத்தம் செய்கின்ற தண்டும் தேவைப்படுகின்றது.சாத்தியத்தைப் பொறுத்து கெரில்லாவிடம் நடுத்தர அல்லது சுய தயாரிப்புரவைப்பையும் இருக்க வேண்டும். ஆனால், அவன் எச்சந்தர்ப்பத்திலும் ரவைகளைப் பேணி வைத்திருக்க வேண்டும். இவையில்லாமல் சமரிட முடியாது. ஆகவே, இதனைத் தங்கத்திற்கொப்பாக மதிப்பிட வேண்டும்.

கெரில்லாவிற்குத் தண்ணீர் நிறைக்கப்பட்ட சாடி அல்லது போத்தல் அவசியமாகும். ஏனெனில், கெரில்லா வாழ்வில் தண்ணீரைத் தேடிப்பிடிப்பது எப்பொழுதும் சாத்தியமாக இருப்பதில்லை. சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தக்கூடிய பின்வரும் மருந்துப் பொருட்களைத் தன்னுடன் வைத்திருக்க வேண்டும். நன்றாகப் பொதியிடப்பட்ட பென்சிலின் அல்லது ஏதாவதொரு நுண்ணுயிர்க்கொல்லிக் குளிகைகள் (குளிகைகளே சிறந்தன) வலி நிவாரண மற்றும் உடல் வெப்பநிலை குறைக்கும் மருந்து (எடுத்துக்காட்டாக, அஸ்பிரின்) அத்துடன் அப்பிரதேத்தில் பரவலாக ஏற்படும் நோய்களுக்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் (சதுப்புநிலக் காய்ச்சலுக்கான மருந்து, வயிற்றுக்கோளாறுக்கான மருந்து ஒட்டுண்ணிகளுக்கெதிராகப் பயன்படுத்தப்படும் வெவ்வேறு வகையான பூச்சு மருந்துத் தூள்கள்) போன்றனவே அவையாகும்.

தொடர்வான்...
**நெற்றிப்பொறியன்**



# தமிழர்களின் பண்டைக்கால வரலாறுகளை தோண்டும்போது சோழர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் உள்ள வரலாறு

தமிழர்களின் பண்டைக்கால வரலாறுகளை தோண்டும்போது சோழர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் உள்ள வரலாற்று ரீதியான ஒரு உண்மைத்தன்மையை காண முடிகின்றது குறிப்பாக சோழர்காலத்தில் எந்த மன்னர்கள் கொடிகட்டி பறந்தார்களோ அவர்களுக்கும் தமிழீழ தேசியத் தலைவருக்குமான ஒரு நெருக்கமான வரலாற்று உறவை காணமுடிகின்றது. அந்த வகையில் கடந்த பதிவில் கரிகால சோழனுக்கும் தலைவருக்குமான வரலாறு பிரசவித்த வரலாற்று அற்புதத்தை பாத்திருந்தோம் அதே போன்றுதான் இன்றைய பதிவில் தேசியத் தலைவருக்கும் இராஜராஜ சோழனுக்கும் இடையேயான ஒரு அற்புத நிகழ்வை பற்றி பார்ப்போம்.

வீட்டில் பிறந்த இரு கடைக்குட்டிகள் புலிக்கொடியை விண்ணில் பறக்கவிட்டு தமிழன் வீரத்தை பாருக்குபறை சாற்றினார்கள் யார் அந்த இரு கடைக்குட்டிகளின் வரலாறு சொல்லும் அற்புதத்தை படித்து பார்ப்போம் வாருங்கள். இராஜராஜ சோழன் பெயரை இன்று கேட்டாலும் தமிழுக்கு புது இரத்தம் பாயும், விண்ணும் பாரும் அதிரும். அந்த அற்புதம் இரண்டாம் பராந்தக சோழனான சுந்தர சோழனுக்கும் அவன் பட்டத்தரசி வானவன் மாதேவிக்கும் ஐப்பசி மாதத்தில் சதய நட்சத்திரத்தில் பிறந்தான் அருண்மொழிவர்மன்.

சுந்தர சோழனுக்கு மூன்று பெரிய தந்தைகள் இருந்தனர்.ஆகையால் சுந்தர சோழன் ஆட்சி பீடம் ஏறமாட்டார் என்றே அனைவரும் நினைத்தனர்.ஆனால் முதலாம் பராந்தகனின் புதல்வன் உத்தமசீலி என்பவன் பாண்டிய நாட்டு போரில் உயிர் துறந்தான். அது போலவே முதல் பராந்தகனின் முதல் புதல்வனும் மிக பெரும் வீரனுமாகிய ராசாதித்தன் ராட்டிடகூட போரில் ஆனை மேலமர்ந்த படியே வீரசொர்க்கம் எய்தினான். முதலாம் பராந்தகனுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தார் அவரது இரண்டாம் புதல்வர் கண்டராதித்தர்.கண்டராதித்தனின் புதல்வன் சிறிய குழந்தை என்பதால் அவருக்கு பின்னர் அவனது இளவலும் சுந்தர சோழனின்தந்தையுமாகிய அரிஞ்சயசோழன் ஆட்சிக்கு வந்தான். சில திங்களில் அவனும் காலமானதால் அவனது புதல்வனாகிய இரண்டாம் பராந்தக சோழனாகிய சுந்தர சோழன் ஆட்சிக்கு வந்தார்.

சுந்தர சோழருக்கு மூன்று குழந்தைகள். முதலாமவன் பெரும் வீரனாகிய ஆதித்ய கரிகாலன். அவனுக்கடுத்து குந்தவை என்னும் பெண் பிறந்தாள். இவர்களுக்கு பின்னர் கடைக்குட்டியாக பிறந்தவன் தான் இந்த அருண்மொழிவர்மன். கி.பி-969 இல் சோழ நாட்டிலேயே சில வஞ்சகர்களால் அருண்மொழிவர்மனின் அண்ணனான ஆதித்ய கரிகாலன் கொல்லப்பட்டான்.

ஆதித்த கரிகாலன் போன்றதொரு வீரனை அது நாள் வரை கண்டிராத சோழ நாடு அவனது மறைவால் சோகத்தில் ஆழ்ந்தது.ஆதித்தனின் மறைவை தாங்க இயலாத சுந்தர சோழன் சில தினங்களில் வானுலகம் எய்தினான்.சுந்தர சோழனின் மறைவுக்கு பின்னர் சோழ நாட்டில் பெரும் அரசியல் குழப்பம் நிகழ்ந்தது. சோழ நாட்டின் கீழ் இருந்த சிற்றரசர்களில் ஒரு சாரார் கண்டராதித்தரின் புதல்வரான உத்தம சோழர் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்றும் மற்றொரு சாரர் அருண்மொழிவர்மனே ஆட்சி பீடம் ஏறவேண்டும் என்றும் தங்களுக்குள் பிரிந்தனர். சங்கு சக்கர ரேகைகளை உடைய அருண்மொழிவர்மனுக்கு மக்களின் ஆதரவு பெரும் அளவில் இருந்தது. இந்த அரசியல் குழப்பத்தை பயன்படுத்தி எதிரிகள் மீண்டும் சோழ நாட்டின் மீது படைஎடுக்க கூடாது என்று நினைத்த அருண்மொழிவர்மன் இந்த பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக ஆட்சி பீடத்தின் மீதான தனது உரிமையை கண்டராதித்தரின் புதல்வனான உத்தம சோழனுக்கு விட்டுகொடுத்தார். மிக பெரும் தொன்மை வாய்ந்த சோழ நாட்டின் அரசுரிமையை தனது சிறிய தந்தைக்காக விட்டு கொடுத்தது அருண்மொழிவர்மனின் தயாள குணத்தை காட்டுகிறது. உத்தம சோழனின் பதினைந்து ஆண்டுகால ஆட்சிக்கு பின்னர் கி.பி-985 இல் அரசு கட்டில் ஏறினான் ராசகேசரி அருண்மொழிவர்மன். தனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் (கி.பி-988) சேரனையும் பாண்டியனையும் கந்தாளூர் சாலை போரில் வென்றான். இப்போருக்கு பிறகே அரசருக்கெல்லாம் அரசர் என்று பொருள் படும் “ராஜராஜன்” என்னும் அபிஷேக பெயரை சூடினான். அதுவே அவனது பெயராக பின்னாளில் மாறிப்போனது.

விசயாலய சோழனால் அடிகோலப்பட்ட பிற்காலசோழஅரசுமகோன்னதம்அடைந்தது இவனது ஆட்சியிலே தான்.அது நாள் வரை தேங்கி இருந்த சோழரின் ஆற்றலை அனைத்து துறைகளிலும் வெளிக்கொண்டு வந்து சோழர் பரம்பரையை ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னரும் பேச செய்தவன் இவனே. இவன் இயற்கையிலேயே நுண்ணறிவும், பெரும் ஆற்றலும், மக்களின் செல்வாக்கும், இறைவனின் ஆசியும் உடையவனாய் இருந்து இருக்க வேண்டும். இவனது முப்பது ஆண்டு கால நீண்ட ஆட்சியும் இவனது சாதனைகளுக்கு பெருந்துணை புரிந்துள்ளது.

அது நாள் வரை எந்த தமிழ் மன்னரும் செய்திராத ஒன்றை இராஜராஜன் செய்தார். தனது ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை அனைவரும் நன்குணரும் பொருட்டு அவற்றை விளக்கும் மெய்க்கீர்த்தியை இனிய தமிழில் அகவற்பாவில் அமைத்து தன் கல்வெட்டுகளின் துறைகத்தில் பொறிக்கும் வழக்கத்தை தொடங்கினான். மன்னனது ஆட்சி வளர வளர மெய்க்கீர்த்தியும் வளர்ந்து கொண்டே போகும். மெய்க்கீர்த்திகளில் இருப்பனவெல்லாம் கற்பனை அல்ல. அவை அனைத்தும் அந்த மன்னனின் ஆட்சியில் நிகழ்ந்த உண்மை சம்பவங்களே. பாண்டி மண்டலமும், சேர மண்டலமும் அடங்கிய ராஜராஜ தென்மண்டலமும், தொண்டை மண்டலமாகிய சயங்கொண்ட சோழ மண்டலமும், கங்க மண்டலமும், கொங்கு மண்டலமும், நுளம்பாடி மண்டலமும், கலிங்க மண்டலமும், ஈழமாகிய மும்முடி சோழ மண்டலமும் இவனது ஆட்சியில் சோழ நாட்டிற்க்கு உட்பட்டு இருந்தது. மற்றும் பல அந்நிய நாடுகளும் இவன் கட்டுப்பாட்டில் இருந்தது. வளர்ந்து கொண்டே வந்த சோழ சாம்ராஜ்யத்தின் நிதிநிலையை சமாளிக்க அது வரையில் யாரும் யோசிக்காத வண்ணம் தனது சாம்ராஜ்யத்தை அளக்க உத்தரவிட்டான் ராஜராஜன். இப்பெரும் பணியை மிககுறுகிய காலத்தில் செய்து முடித்தவன் சேனாதிபதி குரவன் உலகளந்தானான ராஜராஜ மாராயன். எவ்வளவு நன்செய் நிலங்கள், புன்செய் நிலங்கள், காடுகள், விளைநிலங்கள் என்பதை புலப்படுத்தி அவற்றுள் விளைநிலங்களுக்கு மட்டும் வரி விதிக்குமாறு பரிந்துரைத்தான்.

இவ்வாறு பல துறைகளில் சிறப்புற்று விளங்கிய ராஜராஜனுக்கு பல்வேறு அபிஷேக பெயர்கள் இருந்தன.

ஷத்திரிய சிகாமணி, ராசேந்திர சிங்கன், உய்யக்கொண்டான், பாண்டிய குலாசினி,



கேரளாந்தகன், நித்த வினோதன், ராசா சிரையன், சிவபாதசேகரன், சநநாதன், சிங்களாந்தகன், சயங்கோண்டசோழன், மும்முடி சோழன், ரவிகுல மாணிக்கம், நிகரிலி சோழன், சோழேந்திர சிங்கன், சோழமார்த்தாண்டன், ராசா மார்த்தாண்டன், தெலுங்குகுல காலன், கீர்த்தி பராக்கிரமன் என்பன ஆகும்.

மன்னர்கள் கோயில் கட்டுவது என்பது புதிது அன்று. எதையும் புதிதாக முயற்சி செய்யும் ராஜராஜன் இதிலும் தனது புதுமையை காட்டினார். அதாவது அதுவரை தென்னாட்டில் எங்குமே இல்லாத பரிமாணத்தில் 793 அடி நீளத்தில் 397 அடி அகலத்தில் 216 அடி உயரத்தில் ராஜராஜேஸ்வரம் என்னும் கோயிலை கட்டினான், இக்கோயில் ஆயிரம் ஆண்டுகள் கடந்து தமிழரின் கட்டிட கலையை உலகிற்கு உணர்த்துவது திண்ணம்.

இவ்வாறாக பல துறைகளில் சோழர்களின் முத்திரையை பதித்த ராஜராஜன் கி.பி-1012-இல் தனது புதல்வனாகிய, பின்னாளில் ராஜேந்திரசோழன் என்னும் அபிஷேக பெயரைஅடைந்தஇளங்கோமதுராந்தகருக்கு இளவரசு பட்டம் சூட்டினான். இவனது வீர சாகசங்களை அடிக்கிக்கொண்டே போகலாம் ஆனால் கட்டுரை நீளும் என்பதால் சுருக்கி கொண்டு. இதே ஓர்மத்தோடும் திமிரோடும் ஈழவள நாட்டில் ஒரு தெய்வக் குழந்தை கடைக்குட்டியாக உதித்தது வரலாறு ஏடுகளாக இருக்கும் தமிழர் வீரத்தை உலகுக்கு காட்டினான் அந்த சூரிய தேவன்.

திருமேனியார் குடும்பத்தில் தோன்றிய திரு. திருவேங்கடம் வேலுப்பிள்ளையும், நாகலிங்கம் வழித்தோன்றிய பார்வதியும் திருமணத்தில் இணைந்து கொண்டனர். இவர்களுக்கு கடைக்குட்டியாக வல்வையில் அவதரித்தான் பிரபாகரன். இவருக்கு ஒரு அண்ணனும் இரண்டு அக்காமாரும் இருக்கிறார்கள். அண்ணனும் அக்காமார்களும் திருமணம் செய்து விட்டார்கள். மூத்தவர்கள் குடும்ப வாழ்க்கையோடு நின்றுவிட, கடைக்குட்டி மட்டும் தமிழையும் அடிமையாக மாற்றான் காலில் விழுந்து கிடக்கும் தமிழர்களையும் பற்றி எண்ணினான். இந்தச் சிங்கள இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருக்கும் தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற உத்வேகம் அவர் மனதில் உருவாகியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இனவெறி அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று அவர் ஆழமாக உறுதியாக உணர்ந்தார்.

கடைக்குட்டியான பிரபாகரன் தனது தாய் தந்தையரிடம் உங்களுக்கோ, குடும்பத்திற்கோ நான் ஒருபோதும் பயன்படமாட்டேன். என்னால் உங்களுக்கு எத்தகைய தொல்லையும் வேண்டாம். என்னை என்போக்கில் விட்டுவிடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்” என்று கூறிவிட்டு உலக வரலாற்றில் மிகப்பெரிய சரித்திரத்தை படைக்க வெளிக்கிட்டார். இதனை அன்று எவரும் அறிந்திருக்கவில்லை. காலம் கடந்தது ஒற்றை கைத்துப்பாக்கியோடு ஆரம்பித்த கடைக்குட்டியின் தமிழருக்கான விடுதலை ப்பயணம்.

துரோகிகள் அழிப்பில் தொடங்கி, இந்திய வல்லரசு தொட்டு பல தடைகளை தவிடுபொடியாக்கி தரை, கடல், வான் என முப்படைகளையும் கட்டமைத்து, உலக வல்லரசுகளுக்கெல்லாம் சிம்மசொப்பனமாக இருந்து, ஒழுக்க சீலனாக சோழர் காலத்தில் வீழ்ந்த புலிக்கொடியை புது இரத்தம் பாய்ச்சி விண்ணில் பறக்க விட்டு உலக அரங்கில் புதிய வரலாற்றை படைத்து தமிழீழத்தின் தேசியத் தலைவனாக உயர்ந்து நின்றான்.

கடை குட்டியாக பிறந்து தோழர்களின் தம்பி எனும் வீரப்பிணைப்போடு அண்ணனாக புலிகள் தலைவனாக தமிழீழ தேசியத் தலைவனாக வையகம் போற்ற உயர்ந்து நின்றான். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடைக்குட்டியாக பிறந்த தமிழன் தமிழை உயர்த்தினார் இன்று இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து பிறந்த தமிழன் தமிழை நிமிர்த்தினான்.

ஈழப் புகழ் மாறன்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட வேண்டியதன் அவசியம்



இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பெரும்பான்மை சிறுபான்மை என்னும் பேத வர்க்கம் விஸ்வரூபம் எடுத்தது. அது 1958, 1968 என கலவர புயலாக இலங்கையை தாக்கியது. 1970 களில் பல்கலைக்கழக தரப்படுத்தல் முறை கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து வடகிழக்கு தமிழ் மாணவர்கள் அதற்கு எதிராக சாத்வீக போராட்டங்களில் ஈடுபட்டனர். அரசு அதனை இராணுவத்தை கொண்டு அடக்க முற்பட்ட பொழுது அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. ஆயுதப் போராட்டத்தில் பல்வேறு இயக்கங்கள் உருவான பொழுதிலும் விடுதலை புலிகள் அமைப்பு இறுதி வரை போராடியது. சுமார் 3 வருடகால கோர யுத்தத்தில் பல உயிர்கள் அழிந்தன, பல சொத்துக்கள் அழிக்கப்பட்டன, பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். இருந்த பொழுதிலும் சுமார் 28 வருடங்களாக வடகிழக்கின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டில் விடுதலைப்புலிகள் வைத்திருந்தனர். ஒரு சிறு அரசாங்கம் போல் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்தது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கம் 5 ஜனாதிபதிகள் முயற்சித்தனர். எந்தவித பலனும் கிடைக்கவில்லை. மக்களின் உயிரிழப்புக்கள் தான் அதிகரித்து சென்றது. இக்காலகட்டங்களில் இந்திய இராணுவமும் இலங்கைக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்து இறுதியில் புலிகளை அழிக்க முடியாமல் வெறுங்கையுடன் திரும்பி சென்ற அவல நிலையும் காணப்பட்டது. உலகில் மிகவும் பயங்கர அமைப்பாக விடுதலைப்புலிகள் காணப்பட்டனர்.

தரைப்படை, கடற்படை, வான்படை, தற்கொலைப்படை என அவர்கள் வசம் இருந்தன. உலகில் மிக ஆபத்தான தற்கொலைப்படை தன்னகத்தே கொண்டு இருந்தாலும் உலகில் உள்ள ஏனைய போராட்ட அமைப்புகளுடன் ஒப்பிடும் பொழுது கண்ணிமானதும் ஒழுக்க கட்டமைப்புடனும் அந்த இயக்கம் காணப்பட்டது. இருந்த பொழுதிலும் தமிழீழக் கொள்கைக்கு எதிராக செயற்பட்ட அரச தலைவர்கள் தமிழ் மிதவாதிகள் என பலர் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டனர் என்பதையும் இவ்விடயத்தில் சுட்டிக்காட்டுவது அவசியமாகின்றது. இந்நேரத்தில் உலக வல்லரசு கட்டமைப்புகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அது 2001 ஆம் ஆண்டு அமெரிக்கா இராணுவ தலைமையகம் தலிபான் தீவிரவாதிகளால் தற்கொலை தாக்குதல் மூலம் அழிக்கப்படுகின்றன. இதனை அடுத்து அமெரிக்கா உட்பட 28 நாடுகள் சகல விடுதலைப்போராட்ட அமைப்புக்களையும் தடை செய்வதாக அறிவித்தது. அதில் விடுதலைப் புலிகள் அமைப்பு அடங்குகின்றது. அச்சமயத்தில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தில் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச அவர்கள் பதவி ஏற்கின்றார். விடுதலைப்புலிகள் அமைப்புக்குள்ளும் முரண்பாடுகள் தோன்றின. விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணாஅம்மான் என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த சில போராளிகளுடன் பிரிந்து செல்கின்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சுகவீனம் காரணமாக மரணிக்க அரசியல் பிரிவு தலைவராக தமிழ் செல்வன் அவர்கள் நியமிக்கப்படுகின்றார். அவரும் விமான குண்டு வீச்சால் மரணமடைய விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதியான பால்ராஜ் அவர்களும் சுகவீனம் காரணமாக மரணமடைய 3ஆம் கட்ட ஈழப்போரும் உக்கிரமடைகின்றது. பல உலக நாடுகளின் ஒத்துழைப்புடனும் இலங்கை முப்படைகளும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வன்னி பெரு நிலப்பரப்பில் கோர யுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகள் ஆயுதங்களையும் நவீன ராடர்களையும் வழங்கி ஆதரவளித்தனர். மன்னார் பிரதேசத்தில் இருந்து ஆரம்பித்த யுத்தம் கிளிநொச்சியை தாண்டி சென்றது. விமான குண்டு வீச்சுகளும் பல்குழல் எறிகணைகளும், கொத்துக்குண்டுகளும் என மிக கோர யுத்தம் இடம் பெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வசித்த மக்கள் உட்பட சுமார் 4 இலட்சம் மக்கள் குறுகிய நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டன. முப்படைகளின் தாக்குதலை தடுக்க முடியாமல் விடுதலைப் புலிகள் பின்வாங்கி சென்று கொண்டு இருந்தனர். மிலேச்சத்தனமான அரசின் குண்டு வீச்சு, கொத்துக்குண்டு, பல்குழல், பீரங்கி தாக்குதல்கள் மக்கள் ஆயிரக்கணக்கில் செத்து மடிந்த துயரம் ஒருபுறம் உணவு இன்றி காயப்பட்ட மக்களுக்கு மருந்து வசதி இன்றி ஒரு பெரிய மனிதப் பேரவலம் வன்னியில் இடம்பெற்றுக்கொண்டு இருந்து மழை வெள்ளமும் மக்களை வாட்டியது. உலக நாடுகள் தங்களை காப்பாற்றும் என மக்களும் புலிகளும் நம்பினார்கள் இந்தியாவில் தமிழ் நாட்டில் பல போராட்டங்கள் இடம்பெற்றன. எமது உறவினர்களின் உயிரிழப்புக்களை கண்டித்து போரை உடனடியாக நிறுத்துமாறு கோரி தமிழ் நாட்டில் வசிக்கும் 3 தியாகிகள் தீக்குளித்து போராடி உயிர் விட்டனர்.

ஆனால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. வன்னியில் உடல்கள் சிதறின. பிஞ்சு மழலைகள் துண்டாகி போயினர், தாய் காயப்பட்டு கிடக்க காப்பாற்ற முடியாமல் கையேறு நிலையில் விட்டு சென்ற மகள், மனைவி காயப்பட்டு குற்றுயிராகக் கிடக்க விட்டு ஏக்கத்துடன் சென்ற கணவன், தன் கண்முன்னே குழந்தை குண்டு வீச்சால் துடித்து சாவதை நேரில் பார்த்த தந்தை இவ்வாறு துயரம் அரங்கேறிக் கொண்டு இருந்தது. உலக நாடுகள் தங்களை காப்பாற்றும் என இறுதிவரை எதிர் பார்த்திருந்த அப்பாவி மக்களுக்கு இறுதியில் அழிவே மிஞ்சியது. குறுகிய இடத்திற்குள் யுத்தம் வந்துவிட்டது மிகக் குறுகிய இடத்தில் 3 இலட்சம் மக்கள் பாதுகாப்பு தேடி அடைந்த நேரத்தில் அரச படைகளின் கோர தாக்குதலால் கொத்து கொத்தாக மக்கள் இறந்து போயினர். முள்ளிவாய்க்கால் மண்ணிலும் நந்திக்கடல் எல்லையிலும் இறுதி யுத்தம் இடம்பெற்று முடிந்தது. மழை வெள்ளத்திலும் குண்டு வீச்சு சத்தங்களுடனும் பல்குழல் சத்தங்களுடனும் இராணுவ துப்பாக்கி வேட்டுகளுடன் புலிகளின் துப்பாக்கி வேட்டுகளுடன் அந்த மண்ணில் மக்களின் மரண ஓலங்கள் அடங்கிப் போனது. சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை அவர்கள் தெரிவித்து இருந்தார். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கவீனர்களாகினர், பல பிஞ்சு மழலைகள் கொல்லப்பட்டதாக உலக சிறுவர் பாதுகாப்பு அமைப்பு கூறியுள்ளது. இதனை விட வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளின் முக்கிஸ்தர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டும் பல பெண் போராளிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக ஐ.நா மனித உரிமை செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் கத்தோலிக்க பங்கு தந்தையர்கள் பொதுமக்கள் என சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியாமல் உள்ளது.

இன்று 11 ஆம் ஆண்டை நோக்கி அதன் நினைவுகள் நடக்க இருக்கின்றது. எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இவ்வருடமும் இடம்பெறும் என அதன் ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். நாட்டில் தற்பொழுது கொரோனா தொற்று காரணமாக அவலப்பட்டுவரும் நிலையிலும் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலை பின்பற்றி சமூக இடைவெளியை பயன்படுத்தி இறுதி யுத்தத்தில் பலியான எமது உறவுகளையும் மண்ணுக்காகவும் போராடி உயிர்நீத்த உறவுகளை நெஞ்சில் சுமந்த வண்ணம் அஞ்சலி செலுத்துவது எமது கடமையாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் இறுதிக்குரல் அடக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்துவது ஒவ்வொரு தமிழ் மக்களின் தார்மீக பொறுப்பாகும். இரத்தமும் சதையுமாக கந்தக வெடி மணத்துடன் மண்ணில் உரமாகிப்போன எம் உறவுகளின் ஆத்மா சாந்தியடைய வேண்டி வணங்கி நிற்கும் இவ்வேளையில் அரசும் முள்ளிவாய்க்கால் நினைவு தூபியை விசாலமாக அமைத்து தமிழ் மக்கள் அனைவரும் தொடர்ந்து தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதை அனுமதிப்பதோடு வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களுக்கு சரியான நீதியை வழங்க வேண்டும் என்பது வடகிழக்கு தமிழ் மக்களின் இதயபூர்வ கோரிக்கையாகும். அரசு இதனை செயற்படுத்தும் என நம்பி இருப்போமாக.

தாயகத்தான்

# தமிழ் அரசியல் தலைமைகளை ஒன்றிணைக்கும் அதிகாரம் கொண்ட தமிழ் அரசியல் குழு உருவாக்கப்பட வேண்டும். இல்லையேல் ஆபத்து



பழைய புராணத்தையே தொடர்ந்தும் நாம் வாசித்துக்கொண்டிருக்க முடியாது. மூலோபாயம் தந்திரோபாயம் என்பவற்றை பயன்படுத்தி நமக்கான தீர்வு திட்டங்களை சிறந்த கொள்கை வகுப்போடு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்குள் நான் நீ என்ற போட்டிகள் உருவானாலும் பொறாமை உருவாகக்கூடாது. தற்பொழுது ஆயுதம் ஏந்தி தமிழினம் போராடக்கூடிய சூழ்நிலை இல்லை. அதற்கு வீற்றோ பவர் கொண்ட ஒரு நாடு உதவி செய்யுமாக இருந்தால் இவ் விவகாரம் தொடர்பில் சற்று யோசிக்கலாம். தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் மலுங்கடிக்கப்பட்டுவிட்டது இனி விடுதலைப்புலிகளின் உருவாக்கம் என்பது சாத்தியமற்றது என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் வெளிநாடுகளில் அரசியல் ரீதியான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த அரசியல் ரீதியான நடவடிக்கையோடு ஈழ தமிழர்களும் கை கோர்க்கும் பொழுது பாரியளவில் அதற்கான வெற்றியை கண்டுகொள்ள முடியும். குறிப்பாக அரசியல் தலைமைகள் தற்பொழுது இருக்கக்கூடிய அரசியல் தலைமைகளின் நிலைப்பாட்டை சுருக்கமாக பார்க்கும் பொழுது இவர்களுக்காக எழுதப்பட்ட ஒரு கவிதையை உங்களுக்கு தருகிறேன். இதில் பிழைகள் இருந்தால் மன்னித்துக்கொள்ளவும். இவர்களை கொச்சைப்படுத்தும் வகையில் அல்ல இவர்களுக்கு இருக்கக்கூடிய திறமைகள் பயன்படுத்தப்படாது அரசாங்கத்தின் சதி வலைக்குள் தெடர்ந்தும் சிக்க வைக்கப்படுகிறது. சம்மந்தன் ஐயா தொடக்கம் மாவை சேனாதிராஜா வரை அன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்ட தலைமைகளினுடைய அன்றிலிருந்து இன்றுவரையான நிலைப்பாடுகள் அப்படித்தான் இருக்கிறது.

**தமிழனுக்கு தீர்வு தான் எப்போ?**

**தை பிறந்தால் வழி பிறக்கும் – இது**
**சம்மந்தன் ஐயாவின் அருள்வாக்கு**

**மாவை சேனாதி தான் கூட்டணியை**
**உடைத்த துரோகி – இது**
**ஆனந்தசங்கரியின் புராணம்**

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு**
**கடந்த பத்தாண்டு என்ன செய்தது**
**அரசாங்கத்திற்கு சோரம் போனது**
**தான் மிச்சம் தேசியப்பட்டியல்**
**கிடைக்காததன் வெளிப்பாடு**
**சுரேஸ் பிரேமச்சந்திரனின்**
**உள்ளக்குமுறல்**

**கூட்டமைப்பு சரியான பாதையில்**
**பயணிக்காவிட்டாலும்**
**தமிழ் மக்களுக்கான தீர்வில்**
**நாம் கூட்டமைப்புடன் இணைந்து**
**பயணிக்கவேண்டியது – நாம்**
**போராட்டம் இயக்கம் என்றவகையில்**
**எமது கடப்பாடு சித்தாந்தனின்**
**வேத சித்தாந்தம்**

**தேசியம் சுயநிர்ணய உரிமை**
**பூகோள அரசியல் இவைதான்**
**எமது இலக்கு இவங்கள் எல்லாம்**
**துரோகிகள் அண்ணன் கஜேந்திரகுமார்**
**பொன்னம்பலம்**

**எம்தலைவர் பிரபாகரன்**
**இணைத்துவைத்த தமிழ்**
**தேசியக்கூட்டமைப்பு இதை**
**யார் பிரித்தாலும் துரோகிகள்**
**விடுதலைப்புலிகள் எம் தலைவனை**
**சுட்டது உண்மை ஆனாலும்**
**தமிழ் இனத்தின் விடுதலைக்காக**
**நாம் அற்பணிப்புடன் செயற்படுகிறோம்**
**செல்வம் அடைக்கலநாதனின்**

**வஞ்சகமற்ற மேடைப்பேச்சு**

**கூட்டமைப்பாக ஐந்து கட்சிகளும்**
**இணைந்து கேட்டதால் தான்**
**நான் முதலமைச்சராக வர சம்மதித்தேன்**
**இப்போது தமிழ் மக்களை ஏமாற்றி**
**அரசியல் செய்ய முற்படுகிறார்கள்**
**நான் சிங்களப்பேரினவாதிகளோடு**
**பழகினாலும் உறவு வைத்தாலும்**
**அவர்கள் இவர்களை விட நல்லவர்கள்**
**எனக்கு மக்களை ஏமாற்றி**
**அரசியல் செய்ய முடியாது – நான்**
**நீதிஅரசாக இருந்தபோது**
**நேர்மையாக செயற்பட்டவன்**
**அது விக்னேஸ்வரனின் வாய்ப்பாடு**

**எல்லாவற்றையும் சகிப்புத்தன்மையுடன்**
**சிரித்தபடியே தம்பி**
**ஆயிரத்து தொளாயிரத்து – என்று**
**ஆரம்பித்து அரசியல் சொல்லி முடிய**
**பொழுது விடிந்துவிடும்**
**இதற்கிடையில் சொல்லவந்த விடயமும்**
**மறந்துவிடும் – தம்பி**
**நீர் சொன்ன விடயம்**
**பரீசிலனை செய்யவேண்டும்**
**கவனத்தில் எடுப்பார்**
**மனதை நோகடிக்கமாட்டார்**
**இவர்தான் மற்றவர்களுக்கு அரசியல்**
**வகுப்பெடுக்க தகுதியானவர்**
**என்று பலராலும் சொல்லப்படும்**
**போராட்ட சாணக்கியன் மாவை**
**சேனாதிராசா**

**சரி இப்படியே வடைசுட்டு வடை சுட்டு**
**காலம் போகுது அதற்குள்**
**நாசமறுத்த கொரோனாவும் வந்திட்டுது**
**ஏதோ இனியாவது மக்களுக்கு**
**நல்லதாபாத்து செய்யுங்கோ...**

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அரசாங்கத்தினுடைய நகர்வுகளை கண்டறிந்து அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர அவர்களை ஆதரிக்கின்ற வகையில் செயற்பாடுகள் அமையக்கூடாது. அடுத்த தலைமுறைக்கு ஒரு விடயத்தை விட்டுச்செல்கின்றோம் என்றால் அந்த தலைமுறை விட்டதிலிருந்து அதனது செயற்பாடுகள் அமையப்பெற வேண்டும். முரணாக கருத்துக்களை இக்கட்சிகள் அனைத்தும் கொண்டிப்பதால் ஒருவர் மீது ஒருவர் துரோகப்பட்டத்தை சூட்டிவருகிறார்கள்.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் தமது தேவைக்கேற்ப செயற்பாடுகளையே தமிழ் தலைமைகளுடன் பேசி அவ்வப்போது செய்து கொண்டதன் பின்னர் குறிப்பிட்ட கட்சிகளை அகற்றி விடுகிறார்கள். அல்லது தென்னிலங்கையில் ஒரு அரசியல் பிரலயத்தை ஏற்படுத்துகிறார்கள். இவ்வாறு இருக்கும் பொழுது ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவது என்பது சாலச்சிறந்தது அல்ல. ஆனாலும் ஒரு கட்சியினர் மும்முரமாக தேசியம் பேசிக்கொண்டிருக்க மற்றவர்கள் அது தேசியம் அல்ல என்று கூறிக்கொண்டு அபிவிருத்தி அரசியலை நோக்கி செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். காலத்தின் தேவையறிந்து அரசியல் செய்வது என்பது இன்றைய காலத்தின் கட்டாயம்.

ஒரு இன அழிப்பை ஏற்படுத்திய அரசாங்கத்துடன் எப்படி கூட்டு வைப்பது என்று பலருக்கும் அவர்கள் மீது ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வரும் போது கள்ளத்தொடர்பு வைக்கிறார்கள் என்ற கருத்தை தமிழ் தலைமைகள் கூறிக்கொள்வது அவர்கள் தலைகளிலே மண்ணை அள்ளி போடுவதற்கு சமனானது அல்லது மல்லாக்கு படுத்து துப்புவதற்கு சமனானது. போரின் வடுக்களை சுமந்த மக்கள் இவ்வாறான அரசியல் தலைமைகளுக்கு எதிராக போர்க்கொடி ஏந்த வேண்டிய சூழல்களை இவர்களே உருவாக்கினார்கள்.

பின்னர் இவர்களை தீவிரவாத செயற்பாடுகள் என்று கூறி அரசாங்கத்துடன் இணைந்து அந்த இனத்தை காட்டிக்கொடுக்கிறார்கள். இவர்கள் தாங்களாகவே திருந்திக்கொள்ள வேண்டும் அல்லது ஒரு வலிமை கொண்ட தமிழ் தலைமை உருவாக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறான ஒரு சூழல் உருவாக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கு தாயக பிரதேசத்தில் ஒரு பெண் இரவு நேரத்தில் தனித்து செல்லக்கூடிய சூழ்நிலை அன்று இருந்தது. இன்று பகல் வேளைகளில் கூட ஒரு பெண் வீடு திரும்பி வரும் வரை பெற்றோர் யோசித்துக் கொண்டிருக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. விடுதலைப்புலிகளுடைய ஒழுக்க விதிகள் அதற்கான தண்டனைகள் என்பன சரியான பாதையில் சென்றது. அப்பிரதேசத்தில் மதுக்கடைகள் இருந்தும் குடித்து விட்டு தெருக்களில் யாரும் நடமாட மாட்டார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் மதுக்கடைகளை திறக்காவிட்டால் சமுதாயத்தில் பாரிய பிரச்சனைகள் உருவாகுவதாக கூறுகிறார்கள். இவையெல்லாவற்றையும் சரியான வழிநடத்தலின் கீழ் கொண்டு செல்வதற்கு சரியான தலைமைகள் உருவாக்கப்பட வேண்டும் இருக்கக்கூடிய தமிழ் தலைமைகளை வைத்து சரியான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வினை வென்றெடுக்க முடியும். ஆயுத போராட்டம் ஏன் உருவாக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். ஆயுதம் ஏந்தி போராடுங்கள் என்று கூறிய தலைவர்களும், ஆயுதம் ஏந்தி போராடிய தலைவர்களும் இதில் இருக்கிறார்கள்.

ஆகவே இவர்கள் சிந்திப்பதற்கு ஒரு நிமிடம் போதும் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் தமிழ் தலைமைகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சிங்கள தலைமைகள் ஒருபோதும் விடமாட்டார்கள் என்பது இவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே திட்டம் போடுகிறோம் என்று காலங்களை இழுத்தடிக்காது காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுங்கள் என்பது போல் ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இரு என்பது போல் நடைமுறை செயற்பாட்டினை இணைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். ஆகவே சரியான தலைமை ஒன்றை உருவாக்கி தமிழ் மக்களுக்கான தீர்வினை குறுகிய கால எல்லைக்குள் தழிழ் மக்கள் வென்றெடுக்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயம் என்பதே இன்றைய நிலைப்பாடு.

இரணியன்

# கொரோனா வைரஸை வைத்து மதக்கலவரத்தை உருவாக்கும் மதவாதிகள்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் அருமையான பழமொழி ஒன்று உள்ளது. ஆனால் அது இப்பொழுது கோவில்கள் உள்ள ஊரில் குடியிருக்கவேண்டாம்என்னும்நிலைக்கு மக்களை கொண்டு செல்கின்றனர் மதவாதிகள். கொரோனா என்னும் உயிர் கொல்லும் கொடிய வைரஸினால் உலகம் முழுவதும் மிகப்பெரிய மனித பேரவலம் இடம்பெற்று வருகின்றது. அதன் தாக்கம் வீரியம் பெற்ற இலங்கையையும் ஆட்டிப் படைக்கின்றது. உயிரிழப்பு குறைவாக இருந்த பொழுதும் நோய்த்தொற்றின் வேகம்அதிகரித்துசெல்வதைஅவதானிக்க முடிகிறது. இலங்கையில் முதல் தொற்று தென் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் தொற்றாளர் சீனாவில் இருந்து வந்த பெண் ஒருவர் ஆவார். வடபகுதியை தொற்றானது தென்பகுதியில் தொற்று ஏற்பட்டு 3 வாரங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் முதல் தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டார். இவர் அரியாலை பெல்தெனியா சபையில் சுவிஸிலிருந்து வந்த மதபோதகரின் ஆராதனையில் பங்குபற்றியவர் என அறிய முடிந்தது. அவர் தாவடிப்பகுதியை சேர்ந்தவர்.

அதன் பின்னர் மொத்தமாக இப்பத்தி எழுதும் வரை 16 பேர் யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இங்கு தான் பிரச்சனை ஆரம்பமானது சுவிஸ் நாட்டில் இருந்து வந்த யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட அந்த சுவிஸ் போதகர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பரிசோதனை சந்தித்து கொரோனா தொற்று இல்லை என அனுமதியுடன் தான் வந்ததாக தெரியவருகின்றது. அது எவ்வாறு இருப்பினும் கொரோனா தொற்றை யாழ்ப்பாணத்தில் பரப்பியவர் என சுவிஸ் போதகர் அறிவிக்கப்படுகின்றார். அதனை யாழ் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி அவர்களும் வடமாகாண ஆளுநர் அவர்களும் உறுதிப்படுத்தி உள்ளனர். சுவிஸ் போதகர் என்றும் தனிமனிதர் பிழையை வைத்து ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களை புண்படுத்தும் சில செயற்பாடுகளில் ஈடுபடல் செய்திகள் வழங்குதல் என்பன கண்டிக்கப்பட வேண்டியவையே. அப்படி பார்த்தால் இந்த கொடிய கொரோனா வைரஸை முதலில் தாக்கிய இடம் சீனா. சீனாவில் இருந்தே ஏனைய நாடுகளுக்கும் பரவியது. சீனாவில் வாழும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் பௌத்த மதத்தை சேர்ந்தவர்கள்.

ஆகவே பௌத்த மதத்தினரை இவ்விடயத்தில் குற்றம் சாட்ட முடியுமா இன்று கொரோனாவில் அதிக உயிரிழப்புக்களையும் அதிக நோய் தொற்றாளர்களையும் கொண்ட நாடாக அமெரிக்கா காணப்படுகின்றது. அப்படி பார்த்தால் அமெரிக்கா சீனா அரசை மட்டும் தான் குற்றம் சுமத்துகின்றதே ஒழிய அங்குள்ள பெரும்பான்மை பௌத்த மக்களை அல்ல. அப்படி இருக்க இங்கு மட்டும் ஏன் இவ்வாறு மதவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றனர். இலங்கையில் கடந்த முப்பதாண்டு காலமாக பெரும்பான்மை சிறுபான்மை என்ற கோணத்தில் தான் கலவரம் இடம்பெற்றது. சிறுபான்மை இனங்களான தமிழ் முஸ்லீம் மக்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில் இஸ்ரேல் நாட்டின் மொசாட் புலனாய்வு அமைப்பானது இலங்கை பேரினவாத அரசியல் தலைவர்களுடன் கைகோர்த்து ஒற்றுமையாக இருந்த சிறுபான்மை இனத்தை பகைக்க வைக்க அவர்கள் எடுத்த ஆயுதம் மதம் முஸ்லீம் பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்ட அப்பாவி மக்களை கொன்று அதை தமிழர் தலையில் போட்டு கலவரத்தை உருவாக்கி தமிழ் முஸ்லீம் மதக்கலவரமானது தங்களுடைய சுய அரசியல் இலாபத்துக்காக இவ்வாறான மதக்கலவரங்கள் உருவாக்கப்படுகின்றன. சிங்கள பௌத்த பேரினவாதம் என்று கூறிக்கொள்ளும் சிறுபான்மை தமிழர்கள் இப்பொழுது தங்களுக்குள்ளே மதவாதத்தை கொப்பளிக்க தொடங்கி உள்ளனர்.

சிங்கள பௌத்த மேலாதிக்க வெறிபிடித்த சில பௌத்த துறவிகள் அண்மையில் முஸ்லீம் பள்ளிவாசல்களை அடித்துடைத்தனர். மக்களை கொன்றனர். இவ்வாறு அண்மைக்காலமாக முஸ்லீம் மக்கள் மீது இனவெறியை காட்டத் தொடங்கிய சமயத்தில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் பெருநாளில் இடம்பெற்ற ஐஎஸ் ஐஎஸ் பயங்கரவாத தாக்குதலில் பல கிறிஸ்தவ மக்கள் கொல்லப்பட்டும் பல கிறிஸ்தவ ஆலயங்கள் முற்றாக சேதமாக்கப்பட்டும் இருந்தன.

ஈஸ்டர் பெருநாள் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த அப்பாவி மக்கள் மீது இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அனைவரும் முஸ்லீம் என அறிய முடிந்தது. கிறிஸ்தவ முஸ்லீம் கலவரம் உருவாகும் சூழ்நிலை காணப்பட்டது. ஆனால் கிறிஸ்தவ முதல்வர்கள் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையால் மக்கள் அமைதி அடைந்து கலவரம் உருவாகாமல் தடுக்கப்பட்டது. ஒரு சில முஸ்லீம் இனவாதிகள் மேற்கொண்ட தாக்குதலினால் ஒட்டுமொத்த இஸ்லாமிய இனத்தையும் அதன் புனிதமான மதத்தையும்இழிவுபடுத்தமுடியாதுஎன்பது உண்மையே உண்மையில் அன்று இருந்த நிலையில் கிறிஸ்தவ குருமார்கள் எடுத்த அற்புதமான நடவடிக்கையால் மக்கள் சமாதானமடைந்தனர்.

இது உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாகும். இதற்கு சில தினங்களுக்கு முன்னர் மன்னார் புகழ் பெற்ற திருக்கேதீஸ்வர வளைவு பிரச்சனை மன்னார் மாவட்டத்தில் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டு இருந்த கிறிஸ்தவ இந்து மத மக்களிடையே கலவரமாக உருவெடுக்க தொடங்கியது. உண்மையில் இந்துக்களின் சார்பாக இருந்த வளைவு பிரச்சனை மன்னார் மதகுருமார்களால் அதைச் சிக்கவைக்க முயற்சித்தமையும் பின்னர் ஒருவாறு மன்னார் ஆயர் மற்றும் சைவ குருமுதல்வர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சிலரின் முயற்சியால் அது சமாதானமாக முடிக்கப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகால கோர யுத்தத்தில் இல்லாத வகையில் இப்பொழுது வட பகுதியில் மதவாதம் உச்சமடைய காரணம் என்ன யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இந்தியாவில் சள சள தீவிர இந்துத்துவ இயக்கமானது இப்பொழுது இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் சிவசேனை என்னும் தீவிர இந்துத்துவ அமைப்பானது மதவாதத்தை தொடர்ச்சியாக கக்கிக்கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது. அதன் வடபகுதிதலைவராக உள்ள மறவன்புலவு



சச்சிதானந்தம் ஐயா அவர்கள் அண்மைக்காலமாக ஊடகங்களுக்கு வழங்கிவரும் செவ்விகளை பார்த்தால் தீவிர இந்துமதவாதத்தை அரங்கேற்றி வருகின்றனர். இந்துமதம் அழிவடைந்து வருவதாகவும் கிறிஸ்தவர்கள் மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபடுவதாகவும் இந்துக் கோவில் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாகவும் இந்து சமய பழைய வரலாறுகள் அழிக்கப்படுவதாகவும் இவற்றில் இருந்து மீட்பதற்காகவே சிவசேனை கட்சி உருவாகி பாடுபட்டு வருவதாக கூறியுள்ளார். ஏற்றுக்கொள்கின்றோம். ஆதியும் அந்தமும் இல்லா சமயம் இந்து சமயம் கல்தோன்றா மண் தோன்றா காலத்துக்கு முன்தோன்றிய சமயம் என அறியமுடிகின்றது. நாம் கேட்கும் கேள்வி என்னவெனில் கடந்த காலங்களில் கடுமையான யுத்தம் வடகிழக்கு பகுதியில் இடம்பெற்று எத்தனை சைவகோவில் அழிக்கப்பட்டு எத்தனை கோவில்களில் தேர்கள் எரிக்கப்பட்டு பெரும் அவலத்தை சந்தித்த பொழுது எங்கிருந்தது இந்த சிவசேன அமைப்பு. அந்த நேரங்களில் ஐயா சச்சிதானந்தம் அவர்களே நீங்கள் அக்காலகட்டங்களில் இதற்கு எதிராக குரல் கொடுத்தீர்களா? இல்லைதானே. அக்காலகட்டத்தில் எத்தனையோ கிறிஸ்தவ தேவாலயங்கள் விமானகுண்டு வீச்சால் அழிக்கப்பட்டன. நவாலி சென்பீற்றர் தேவாலயம், யாக்கப்பர் தேவாலயம் இன்று பல கிறிஸ்தவ கோவில்கள் அழிக்கப்பட்டன.

அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் பல இந்து மத மக்களும் தஞ்சமடைந்து இருந்தனர். சுமார் 250 பேர் கொல்லப்பட்டனர். அப்பொழுது இது பற்றி குரல் கொடுத்தீர்களா மக்களுக்காக எத்தனை கிறிஸ்தவ குருமார்கள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளதை அனைத்து தமிழ் மக்களும் புரிந்து கொள்வார்கள். விடுதலைப்புலிகளால் தற்கொலைக் குண்டு தாக்குதல் நடத்தப்பட்ட சிங்கள மக்களின் புனித பூமியாகும் அவர்களின் மிக முக்கிய வணக்கஸ்தலமான தலதா மாளிகை தாக்குதலினால் தலதாமாளிகை மிக பாரதூரமாக சேதமடைந்ததுடன் அப்பாவி சிங்கள மக்களும் கொல்லப்பட்டனர்.

அப்பொழுது கூட சிங்கள மக்கள் கோபம் கொண்டு தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தாமல் பாதுகாத்தது பௌத்த பேரினவாதம் எனக் கூறப்படும். மகா நாயக்க தேரர்களும் அப்பொழுது இருந்த ஆட்சியாளர்களும் பாரிய ஒரு இனக்கலவரம் அன்று தடுக்கப்பட்டது. ஒரு சிலர் செய்யும் இவ்வாறான சம்பவங்களால் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அவ்வாறு பார்க்க வேண்டாம் என பௌத்த பீடதிபதி தெரிவித்த கருத்தானது அச்சமயத்தில் அனைவராலும் பாராட்டப்பட்டது.

ஒவ்வொருவரும் தமது மதத்தின் பால் உள்ள கலாச்சார தன்மையை பாதுகாப்பதே மிக முக்கியமானது அதில் மாற்றுக் கருத்தில்லை. யுத்த காலங்களில் கூட ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் இருந்த இந்து கிறிஸ்தவ மக்கள் இன்றும் கூட அப்படித்தான் வடகிழக்கு பகுதிகளில் வாழ்கின்றனர். ஒருசிலர் தங்களுடைய சுயநல கொள்கை மதவாதத்தை தூண்டி அதை கலவரமாக்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது. குறிப்பாக வடபகுதிகளில் சிவசேனை கட்சியானது தேர்தல் இடம்பெறும் காலங்களில் இந்து மதத்தை சேர்ந்த வேட்பாளருக்கு மட்டும் இந்துக்கள் வாக்களிக்க வேண்டும் என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதை கடந்த தேர்தல் காலங்களில் அவதானிக்க முடிந்தது. அதுமட்டுமன்றி வவுனியா பிரதேசங்களில் பண்டிகை காலங்களில் இந்து மக்கள் இந்து சமயத்தை பின்பற்றுபவர்களின் கடைகளில் மாத்திரம் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் என சுரொட்டிகள் சிவசேனை கட்சி என பெயரிடப்பட்ட நிலையில் ஒட்டப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு இந்துத்துவ மதவாதத்தை கக்கும் சிவசேனை போன்ற அமைப்பை மக்கள் தூக்கியெறிய வேண்டும்.

இவ்வாறு மதவாதத்தை தூ ண்டும் எந்த மதத்தை சார்ந்தவர் ஆயினும் அவர்கள் சமுதாயத்தில் இருந்து தூக்கியெறியப்பட வேண்டியவர்களே. இன்று கொரோனா என்னும் கொடிய நோயை எமது தாய் நாட்டில் இருந்து முற்றுமுழுதாக துடைத்தொழிக்க அரசும் முப்படையினரும் சுகாதாரப் பிரிவினரும் பொலிசாரும் அர்ப்பணிப்புடனும் சமூக பொறுப்புடனும் உயிரை துச்சமென மதித்து செயற்பட்டுவரும் இவ்வேளையில் மதவாதிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கா விட்டாலும்பரவாயில்லை. ஒதுங்கிஇருந்து அவர்களின் ஆத்மாந்த செயற்பாட்டுக்கு வழிவிட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இன ரீதியான யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் மீண்டும் மதவாதம் என்னும் கொடிய யுத்தத்தை தொடங்க உள்ள யாராகிலும் தயவு தாட்சனியம் இன்றி இரும்புக்கரம் கொண்டு அரசு அடக்க வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும்.

**தாயகத்தான்**




# பிராந்தியச் செய்திகள்



## கொழும்பில் இருந்து மேலும் 1200 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்..!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால், தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் மேல் மாகாணத்தில் சிக்கியுள்ளவர்களில் மேலும் 1200 பேர் அன்று(சனிக்கிழமை) சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



கல்கிசை பொலிஸ் வலயத்தில் 10 பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு மேல் மாகாணத்தில் தற்காலிக தங்குமிடங்கள், வாடகை அறைகளில் தங்கியிருந்தவர்களே, 4 ஆவது கட்டமாக இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் இரத்மலானை புகையிரத மைதானத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு அங்கிருந்து உரிய பகுதிகளுக்கு அனுப்பட்டனர்.

ஏற்கனவே கடந்த 5 ஆம் திகதி நுகேகொடை பொலிஸ் வலயத்தில் 600 பேர், கடந்த 7 ஆம் திகதியும் 1200 பேர் மற்றும் களனி பொலிஸ் பிரிவில் இருந்த 370 பேர் கடந்த சனிக்கிழமை 2 ஆம் திகதி பொலிஸ் பாதுகாப்புடன் அனுப்பட்டனர்.

மேல் மாகாண ஆளுநர், மார்ஷல் ஒப் தி எயார் போர்ஸ் ரொஷான் குணதிலகவின் திட்டத்தின் பிரகாரம், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் வழி நடாத்தலில், இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## கொரோனா நோயாளர்கள் தொடர்பான தகவல்

அன்றைய (2020.05.09) தினம் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகள் 12 பேரில் 10 பேர் கடற்படை சிப்பாய்கள் என இராணுவ தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.ஏனைய இருவரும் கடற்படையினருடன் நெருக்கமாக செயற்பட்டவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.வைரஸ் தொற்றுக்குள்ளாகியதாக உறுதி செய்யப்பட்ட கடற்படை சிப்பாய்கள் 10 பேரும் அவர்களுடன் நெருக்கமாக செயற்பட்டவர்களும் தற்போது முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




இதுவரையில் இலங்கையில் கொரோனா தொற்றிற்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 847ஆகும். அவர்களில் 578 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குணமடைந்த 260 பேர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ள நிலையில் 9 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகம் திறக்கப்படும் ஆனால் கற்றல் நடக்காது – பந்துல குணவர்தன

எதிர்வரும் 11 ஆம் திகதி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டாலும் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் தங்குமிடங்களை திறப்பது போன்ற நடவடிக்கைகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படாது என உயர்க் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் கிருமி ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதால் கல்விச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒரு பிரிவினரை மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.சுகாதார நடைமுறைகளுக்கு அமைய செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




எனினும் மாணவர்களுக்கு இடையிலான சமூக இடைவெளியை பேணுவதற்கு முடியாதால் எந்தவொரு காரணத்திற்காகவும் பழைய முறையில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க எண்ணம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.எந்த சந்தர்ப்பத்திலும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழலில் மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் இணையத்தின் மூலம் முன்னெடுக்கப்படுவதாகவும் அந்த செயற்பாடுகள் குறித்து நாளைய தினத்தில் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைகழக உபவேந்தர்களிடம் கேட்டறியவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இயக்கச்சியில் தனிமைப்படுத்தப்பட்ட 160 பேர் விடுவிப்பு..!

கிளிநொச்சி – இயக்கச்சி 55 படையணியின் தனிமைப்படுத்தப் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 160 பேர் அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த 22 ஆண்களும், 138 பெண்களும் இந்த தனிமைப்படுத்தப் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், 18 நாட்களில் அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.



## அடுத்த இரண்டு வாரங்களுக்கு பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்த வேண்டாம்!

நாளை(2020.05.11) முதல் அடுத்த இரண்டு வாரங்களுக்கு பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்த வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் ஆலோசனை வழங்கியுள்ளார்.



அத்தியாவசிய தேவைகளுக்காக அரச, தனியார் சேவைகளுக்கு செல்லும் பிரிவினருக்கு மாத்திரம் அனுமதி வழங்க வேண்டும் என்றும் அவர் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களங்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட மாட்டாது!

எதிர்வரும் திங்கட்கிழமை மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட மாட்டாது என காவல் துறை அறிவித்துள்ளது.

நாட்டில் ஊரடங்கு உத்தரவு விதிமுறைகள் தளர்த்தப்பட்ட முந்தைய சந்தர்ப்பங்களில் மதுபான விற்பனை நிலையங்களை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.



எனினும், சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றாது, மதுபான விற்பனை நிலையங்களுக்கு முன்னால் பொது மக்கள் கூடியிருந்த சம்பவங்கள் பதிவாகின.

இதனையடுத்து மதுபான விற்பனை நிலையங்களை மீண்டும் திறக்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டது.

எனினும், எதிர்வரும் 11ம் திகதியிலிருந்து மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் மதுபான விற்பனை நிலையங்களும் திறக்கப்படும் என்ற வதந்திகள் சமூக ஊடகங்கள் பரப்பப்படுகின்றன.

இந்நிலையிலேயே, மதுபான விற்பனை நிலையங்களை மீண்டும் திறக்க உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று காவல் துறை தெரிவித்துள்ளது.




தெய்வ மகள் சீரியல் சத்யா என்றதும் அனைவரின் நினைவிற்கும் வருபவர் வாணி போஜன் தான். சின்னத்திரையில் வந்த வேகத்தில் உச்சம் பிடித்தவர் பெரிய திரையிலும் வந்துவிட்டார்.

அண்மையில் அவர் ஹீரோயினாக அறிமுகமான ஓ மை கடவுளே படம் வெற்றியை பதிவு செய்தது. இதனையடுத்து சில பட வாய்ப்புகளும் வாணி போஜனுக்கு வந்தது.

இந்நிலையில் அவர் அடுத்ததாக வெப் சீரிஸ் ஒன்றில் நடிக்கவுள்ளாராம். இதில் அவருக்கு ஜோடியாக நடிகர் ஜெய் நடிக்கிறார். இந்த வலைதொடரை இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் தயாரிக்க அவரின் உதவியாளர் இயக்குகிறாராம்.

இப்படம் ஹாட் ஸ்டாரில் ரிலீஸ் ஆகிறதாம்.





சமீபத்தில் நடிகை தமன்னா திருமணம் குறித்து செய்து ஒன்று சமூக வலைத்தளத்தில் பேசப்பட்டு வருகிறது.

நடிகை தமன்னா பிரபல பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான அப்துல் ரசாக் என்பவருடன் திருமணம் செய்து கொள்ளப்போவதாக பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த திருமண சர்ச்சை எழுந்ததற்கு காரணம் தமன்னாவும் அப்துல் ரசாக்கும் நகை கடையில் ஒன்றாக இருக்கும் புகைப்படம் தான்.

ஆனால், அந்த புகைப்படம் சில ஆண்டுகளுக்கு முன் துபாயில் உள்ள ஒரு நகை கடை திறப்பு விழாவில் எடுக்கப்பட்டது என்று கூறி, இந்த திருமண செய்தி முற்றிலும் பொய் என நடிகை தமன்னா மறுப்பு தெரிவித்துள்ளார். மேலும் அப்துல் ரசாக் என்பவருக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது குறிப்பிடத்தக்கது.

நடிகர் தனுஷ் தனது நடிப்பினால் திரையுலகில் மிக சிறந்த இடத்தை தன் வசம் பிடித்து வைத்துள்ளார்.

இவர் மட்டும் தான், தனது ரசிகனுக்காக மாரி, பட்டாஸ் போன்ற மாஸ் படங்களும் நடிப்பார். அதே சமையத்தில் விமர்சன ரீதியாகவும் வெற்றிபெற அசுரன், வடசென்னை போன்ற கன்டென்ட் படங்களையும் நடிப்பார்.

இந்நிலையில் இவர் அடுத்தடுத்து நடித்து வெளியாகவுள்ள படங்கள் என்னென்ன, அது யாருடைய இயக்கத்தில் என்று இங்கு பார்ப்போம்...

1. ஜகமே தந்திரம் - கார்த்திக் சுப்ராஜ்

2. கர்ணன் - மாரி செல்வராஜ்

3. D43 - கார்த்திக் நரேன்

4. Atrangi Re - ஆனந்த் எல். ராய்

5. D44 - மித்ரன் ஜவகர்

6. சத்யா ஜோதி தயாரிப்பு நிறுவனத்துடன் மீண்டும் ஒரு படம் - ராம்குமார்

7. புதுப்பேட்டை 2 - செல்வராகவன்

8. வடசென்னை 2 - வெற்றிமாறன் / un official }



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள மாஸ்டர் படமே இன்னும் வெளிவரவில்லை. ஆனால் இப்படத்திற்கு பிறகு விஜய், சன் பிச்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில், ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில், தமன் இசையில் நடிக்கப்போவதாக பெரிதளவில் பேசப்பட்டு வருகிறது.



ஆனால், இதுவரை இச்செய்தியை குறித்து எந்த ஒரு அதிகாரப்பூர்வதகவலும் வெளிவரவில்லை. இந்நிலையில் தற்போது விஜய் 66வது படத்திற்கான பேச்சு துவங்கிவிட்டது.

ஆம் விஜய் தனது 66 வது படத்தை தேனாண்டாள் தயாரிப்பு நிறுவனம் தான் தயாரிக்கவுள்ளது. இதற்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பை படத்தின் தயாரிப்பாளரே அறிவித்து விட்டார்.

இந்நிலையில் இப்படத்தை இயக்குனர் பாண்டிராஜ் இயக்கப்போவதாக தகவல் கசிந்துள்ளது. மேலும் இந்த கதை ஒரு கிராமத்து கதையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

தொகுப்பு :- ஹாசினி






## பெண்களுக்கு பயனுள்ள முக அழகு குறிப்புகள்!

உலர்ந்த சருமத்திற்கு கேரட்டை நன்றாக அரைத்து ஒரு ஸ்பூன் தேன் கலந்து 20 நிமிடம் முகத்தில் பூசி பின் குளிர்ந்த நீரில் கழுவவேண்டும். எண்ணை வழியும் முகத்திற்கு மருந்து கடைகளில் ஹெர்பல் ஸ்கின் டானிக் கிடைக்கும். இதனை இரவில் முகத்தில் பூசிக்கொள்ளவும். இவ்வாறு செய்து வந்தால் கறுத்துப் போவது, வறண்டு போவது, மற்றும் பருக்களிலிருந்து முகத்தைக் காப்பாற்றலாம்.

சருமத்தின் நிறத்தை நிர்ணயம் செய்வது மெலனின் எனப்படும் நிறமிகள். இவை சருமத்தின் அடியில் கூடக்கூட நிறம் குறையும். நிறம் குறைவதற்கு காரணம் என்னவென்றால் நாம் வெயிலில் வெளியே செல்லும் போது சருமத்தின் கீழே உள்ள இந்த நிறமிகள் சருமத்தின் வெகு அருகில் வருகின்றன. அதனால் தான் வெயிலில் அலைபவர்களுக்கு உடம்பு கருக்கிறது.

வெள்ளரிச்சாறு இரண்டு ஸ்பூன், துளசிச்சாறு இரண்டு ஸ்பூன், புதினா சாறு அரை ஸ்பூன், எலுமிச்சம் பழசாறு அரை ஸ்பூன் எடுத்து நன்றாக கலக்கி கொள்ளவும். பஞ்சை இந்த சாற்றுக் கலவையில் முக்கி முகம் பூராவும் தேய்த்து 15 நிமிடம் கழித்து கழுவி விடவும். முகம் பட்டுப் போல் மென்மையாக இருக்கும்.

ரோஜா இதழ்களை தண்ணீரில் போட்டு வைத்து அந்த நீரில் முகம் கழுவி வந்தால் முகம் புது மெருகோடு இருக்கும்.

கசகசாவில் எலுமிச்சம் பழச்சாறு விட்டு மை போல் அரைத்து முகப்பரு உள்ள இடத்தில் தடவி வந்தால் பருக்கள் மறைந்துவிடும். முகம் கவர்ச்சிகரமாகவும், அழகாகவும் இருக்கும்.

முள்ளிக்கி சாற்றுடன் சிறிது தயிர் சேர்த்து முகத்தில் தேய்த்து ஊற வைத்து வந்தால் முகம் நல்ல நிறம் பெறும்.

முகப்பரு உள்ள இடத்தில் சந்தனம், மிளகு, ஜாதிக்காய் ஆகிய மூன்றையும் நீர்விட்டு இழைத்து போட்டு வந்தால் பரு தானே மறைந்து விடும்.

## தினம் ஒரு கிளாஸ் தக்காளி சாறு குடித்தால் என்னவாகும் தெரியுமா?

தக்காளி என்பது நமது சமையல் முறையில் தவிர்க்க முடியாத ஒன்று. தக்காளி சாற்றில் உள்ள ஊட்டச்சத்துகளான வைட்டமின் ஏ மற்றும் சி ஆகியவை உடலுக்கு புத்துணர்ச்சி தரவல்லது. வைட்டமின் ஏ சத்து இருப்பதால் கண் பார்வை தொடர்பான பிரச்சனைகள் வருவதை தடுப்பதோடு, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது, பல் மற்றும் எலும்பின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கிறது.

**கொலஸ்ட்ராலை குறைக்கும்:**

தினமும் தக்காளி சாறு குடிப்பது நமது ரத்த ஓட்டத்தில் பொதுவாக அதிக அளவில் இருக்கக்கூடிய கெட்ட கொழுப்பை கரைக்கும். தக்காளியில் உள்ள நார்ச்சத்து தேவையற்ற கொழுப்பை நம் உடலில் இருந்து வெளியேற்றி உடல் எடையையும் ஆரோக்கியமான வழியில் குறைக்கும்.

**உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றும்:**

நாம் தினமும் சாப்பிடும் பிற உணவு வகைகளில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய நச்சுகள் மற்றும் ரசாயனங்கள் இருந்தால் அவற்றை இந்த தக்காளி சாறு வெளியேற்றிவிடும். மேலும் தக்காளியில் உள்ள சல்பர் மற்றும் குளோரின் அளவு கல்லீரல் மற்றும் சிறுநீரக அமைப்பு வேலை செய்வதை ஊக்குவிக்கும். தக்காளி சிறந்த முறையில் உடலை சுத்திகரிக்கும் ஒரு கருவி ஆகும்.

**செரிமானத்திற்கு உதவும்:**

தக்காளி பழச்சாற்றை பருகுவதன் மூலம் உடலின் ஈரப்பதம் தக்கவைக்கப்பட்டு ஆரோக்கியமான உணவுகளில் உள்ள சத்துகளை முழுமையாக உறிந்தெடுத்து அத்தியாவசிய ஊட்டச்சத்துகளை உடலுக்கு தரவல்லது. செரிமானக் குழாயில் சிக்கியுள்ள உணவு துண்டுகளை சீர் செய்து அஜீரணப் பிரச்னைகளையும் தீர்க்கும்.

**இதய நோயிலிருந்து பாதுகாக்கும்:**

தக்காளியில் உள்ள பி6 என்கிற ஊட்டச்சத்து இதய நோய்கள் வருவதற்கான அபாயத்தை குறைக்கக்கூடியது. இதயம் தொடர்பான பிரச்னைகள் வருவதற்கு முக்கிய காரணியாக இருக்கும் ஹோமோசைஸ்டீன் இடமிருந்து இந்த சாறு நம்மை பாதுகாக்கும்.

தக்காளி பழச்சாறு தோலின் மேல்புறத்தில் உள்ள பருக்கள், வீக்கங்கள் போன்ற தோல் தொடர்பான நோய்கள் வருவதை தடுக்கும். தோலில் உள்ள பெரிய பெரிய துளைகளை இது மூடுவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசால் தூசி போன்றவை தோலின் வழியாக நம் உடலில் நுழைவதை தவிர்க்கலாம். தக்காளி செடிகள் நுரையீரல், மார்பகம், குடல் புற்றுநோய்கள் வருவதை தவிர்க்கும். தினசரி ஒரு கிளாஸ் தக்காளி சாறு எண்ணற்ற மருத்துவ நன்மைகளை தரவல்லது.





## கர்ப்பப்பை, மாதவிடாய் கோளாறுகளை சரிசெய்யும் இயற்கை மருத்துவம்

மிளகு, வெள்ளைப் பூண்டு, வெள்ளைக் குன்றிமணி வேர், கண்டங்கத்திரி வேர், வெள்ளைச் சாரணை வேர் வகைக்கு 5 கிராம் எடுத்து துளசிச்சாறு விட்டு அரைத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து, வீட்டு விலக்கான மூன்றாம் நாள் காலை மட்டும் கொடுக்கலாம்.

ஆலமரப்பட்டை பொடி அல்லது ஆலமரப் பூக்களைக் காயவைத்துப் பொடியாக்கி காலை வேளையில் பாலில் கலந்து குடித்து வந்தால் கருப்பப் பை வீக்கம் குணமாகும்.

ஆலமர இலைகளைப் பொடி செய்து வெண்ணெயில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் மாதவிலக்குக் கோளாறுகள் குணமாகும்.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் பொடி அல்லது மாத்திரை சாப்பிடுவதன் மூலம் கர்ப்பப் பை தொந்தரவுகள் நீங்கும்.

வாழைப்பூ சாறு அல்லது வாழைத் தண்டைப் பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கர்ப்பப் பை கோளாறுகள் நீங்கும்.

உளுந்தங்களி செய்து சாப்பிடப் பெண்களுக்கு கர்ப்பக் குழி சுத்தமாகும். அதைப் போல் முருங்கைப் பூவையும் சாப்பிடலாம்.

இளம் ஆலம் விழுதை 20 கிராம் எடுத்து அரைத்துப் பசும் பாலில் கலந்து மாதவிலக்கின் முதல் நாளில் இருந்து 5 நாட்கள்வரை குடித்தால் நல்லது.

சதகுப்பை, எள், கருஞ்சீரகம் சூர்ணம் (amenorrhoea) மாதவிடாய் வராத தன்மையில் பலன் அளிக்கிறது.

நீ கொடுத்த அன்பை
மறக்கவில்லை.....
வேறு ஒருவரின் அன்பை ஏற்க
மனமுமில்லை...
ஆதலால் தனிமைக்குள்
சிறைப்பட்டு
கொண்டேன் அன்பே...

தொகுப்பு :- சப்தஹி

# மார்ச் 11இல் லொக்டவுன் : டிசம்பரிற்குள் 11கோடி,60இலட்சம் குழந்தைகள் பிறக்கும்!



இந்தியாவில் வரும் டிசம்பர் 16ஆம் திகதி வரையில் 2 கோடி குழந்தைகள் பிறக்கும் என்று ஐ.நா. வின் குழந்தைகள் நல அமைப்பான யுனிசெப் கூறி உள்ளது. அதே நேரத்தில் கொரோனா வைரசால் பிரசவ பராமரிப்பில் பாதிப்பு ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளது.

சீனாவின் உகான் நகரில் கொரோனா வைரஸ் தொற்று கடந்த ஆண்டு டிசம்பர் 1ஆம் திகதி முதன் முதலாக தென்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த கொலைகார வைரஸ் தொற்று, உலகளாவிய தொற்று நோய் என சென்ற மார்ச் மாதம் 11ஆம் திகதி உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது.

இந்த கொரோனா வைரஸ் தொற்று மென்மேலும் பரவாமல் தடுப்பதற்காக உலக நாடுகள் பலவும் ஊரடங்கு நடவடிக்கையை எடுத்தது. பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கி உள்ளனர்.

இந்த நிலையில், உலகமெங்கும் பெண்கள் கருத்தரிப்பது அதிகமாகும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த கர்ப்பங்களால் உலகமெங்கும் 11 கோடியே 60 இலட்சம் குழந்தைகள் பிறக்கப்போகின்றன. கொரோனா வைரஸ் தொற்று உலகளாவிய தொற்றுநோயாக அறிவிக்கப்பட்ட கடந்த மார்ச் 11ஆம் திகதிக்கு பின்னர் 9 மாதங்களில் உலகில் இதுவரை இல்லாத வகையில் அதிக எண்ணிக்கையில் குழந்தை பிறப்பு இருக்கும். இந்தியாவில்தான் அதிக குழந்தைகள் பிறக்கும். அதாவது, மார்ச் 11ஆம் திகதி தொடங்கி டிசம்பர் 16ஆம் திகதி வரையில் 2 கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறக்கும் என்று ஐ.நா.வின் குழந்தைகள் நல அமைப்பு யுனிசெப் கணித்துள்ளது. இதே போன்று கொரோனா வைரஸ் தோன்றிய நாடான சீனாவில் 1 கோடியே 35 இலட்சம் குழந்தைகள் பிறக்கும்.

நைஜீரியாவில் 64 இலட்சம் குழந்தைகளும், பாகிஸ்தானில் 50 லட்சம் குழந்தைகளும், இந்தோனேசியாவில் 40 இலட்சம் குழந்தைகளும் பிறக்கும் என்று யுனிசெப் கூறி உள்ளது. எதிர்பார்க்கப்படுகிற குழந்தைகளின் எண்ணிக்கையில் 6 வது இடத்தில் உள்ள அமெரிக்க நாட்டில் மார்ச் 11 முதல் டிசம்பர் 16 வரையில் 32 இலட்சம் குழந்தைகள் பிறக்கும்.

இந்த நாடுகளில் எல்லாம் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தோன்றுவதற்கு முன்பாகவே புதிதாக பிறந்த குழந்தைகளின் இறப்புவீதம் அதிக அளவில் இருந்ததாகவும், இது கொரோனா வைரஸ் பரவியுள்ள சூழ்நிலையில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் யுனிசெப் எச்சரித்துள்ளது. நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையில் இந்தியாவில் 2 கோடியே 41 இலட்சம் குழந்தைகள் பிறக்கும் என்றும் தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில் கொரோனா வைரசை கட்டுப்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் பிரசவ பராமரிப்பு, உயிர்காக்கும் சுகாதார சேவைகள் பாதிக்கும், கர்ப்பிணிகள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பும் உள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன. இதன் காரணமாக பணக்கார நாடுகள் கூட பாதிப்புக்கு ஆளாகுமாம். புதிய தாய்மார்களும், புதிய குழந்தைகளும் கொரோனா வைரசால் ஏற்பட்டுள்ள கடுமையான எதார்த்தங்களுக்கு மத்தியில் வரவேற்கப்படுகிற சூழல் உருவாகும். இதையொட்டி யுனிசெப் அமைப்பின் செயல் இயக்குனர் ஹென்ரிட்டா போரே கூறியதாவது:-

உலகமெங்கும் கோடிக்கணக்கான பெண்கள் தாயாகும் நடவடிக்கையில் இறங்கி உள்ளனர். ஆனால் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில் சுகாதார மையங்களுக்கு செல்லலாம். அவர்கள் சுகாதார பணிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பால் அவசர சிகிச்சையை இழக்க நேரிடலாம். எந்த ஒரு சூழலிலும் இப்போது அமையக்கூடிய வாழ்க்கை சூழலுக்கு அவர்கள் தங்களை பக்குவப்படுத்தி கொண்டு தயாராக வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றுநோய் சூழல், தாய்மை அடைவதை மறுபரிசீலனை செய்ய வைக்கும் என்றெல்லாம் கற்பனை செய்யமுடியாது. இந்த ஆண்டு சர்வதேச அன்னையர் தினம் ஒரு கடுமையான தினமாக அமைகிறது. ஏனென்றால், கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக பல குடும்பங்கள் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. இது ஒற்றுமைக்கான நேரம். அனைவரையும் ஒன்றிணைக்கும் நேரம்.

ஒவ்வொரு கர்ப்பிணி தாயும், அவளுக்கு தேவையான ஆதரவை பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இதன்மூலம் அடுத்தடுத்த மாதங்களில் பாதுகாப்பாக குழந்தை பிறக்கவும், உயிரைக்காப்பாற்றவும் நாங்கள் உதவ முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

வரும் மாதங்களில் உயிர்களை காப்பதற்கு அரசாங்கங்கள் தேவையான சுகாதார பராமரிப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று யுனிசெப் கேட்டுக்கொண்டுள்ளது. குறிப்பாக கர்ப்பிணிகளுக்கு தேவையான மருத்துவ பரிசோதனைகளை பெறவும் நல்ல விதமாக குழந்தைகளை பெற்றெடுக்கவும், பிரசவத்துக்கு பிந்தைய கவனிப்புகளை சரியாக பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யுனிசெப் கேட்டுக்கொண்டுள்ளது.

சப்தஹி

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் இராஜதந்திர நடவடிக்கைகளை சீர்குலைக்கும் சுமந்திரன் – அரசியல் விமர்சனம்



இன்றைய அரசியல் சூழ்நிலையில் தந்திரோபாயம் மூலோபாயம் என்பவற்றை பயன்படுத்துவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியுமே தவிர மாறிமாறி வருகின்ற அரசாங்கங்களுடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக ஒருபோதும் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாது.

இருப்பினும் அற்ப்பசொற்ப அரசியல் சலுகைக்காக அண்மைக்காலமாக தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து கொண்டு செயற்படும் விதமானது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசியல் அவதானிகளும் ஏனைய தமிழ் கட்சி தலைவர்களினாலும் விமர்சனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் அன்று தமிழ் மக்களுக்கு முன்னெடுக்கப்பட்டு வந்த 7 சர்வதேச பேச்சுவார்த்தைகளும் 14 உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிவடைய இவர்கள் போன்ற தலைவர்களே காரணமாக இருந்தார்கள்.

தென்னிலங்கையில் இனவாதத்தை பேசி கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றமைக்கும் சுமந்திரனின் குழப்பவாத நடவடிக்கைகளே காரணமாக இருந்தது.

குறிப்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்து தமிழ் கட்சிகளையும் இணைத்து தீர்வு ஒன்றை பெறும் வகையில் கட்சி ஒற்றுமையை வலுப்படுத்தி அரசியல் தீர்வு திட்டம் ஒன்றை தயாரித்தார்கள்.

அந்த அரசியல் தீர்வு திட்டத்தினை மெருகுபடுத்தும் வகையில் சுமந்திரனினுடைய செயற்பாடுகள் அமைந்திருந்தது. அதனை குழப்பியடிக்கும் நோக்கில் செயற்பட்டதன் விளைவு தமிழ் தேசிய மக்கள் முன்னணி உட்பட ஏனைய கட்சிகள் வெளியேறின. இதனால் தென்னிலங்கையில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து ஈழ இராச்சியத்தை கோரப்போகின்றார்கள் என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. அதன் விளைவே 53 இலட்சம் வாக்குகளை பெற்று கோட்டபாய அவர்கள் வெற்றிபெற்றார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பிரதமர் உடனான சந்திப்பில் கூட்டமைப்பு விசேடமாக கலந்து கொண்டது. எதிர்க் கட்சியும் கூட இச் சந்திப்பை நிராகரித்திருந்தனர். இதுவொரு இராஜதந்திர சந்திப்பாகவே அனைவராலும் பார்க்கப்படுகிறது. நிலைமை இவ்வாறிருக்க பாராளுமன்றத்தை கூட்டுமாறும், தேர்தலை நடத்துமாறும் ராவைய பத்திரிகையின் பணிப்பாளர் விக்டரைவன் அவர்களால் வழக்குத் தாக்கல் முன்னெடுப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

அதனை எதிர்த்து வாதாடுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பயன்படுத்தப்பட இருப்பதாகவும் இணைய தளங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளன.

இதனது உண்மைத்தன்மை எவ்வளவு தூரம் என்பதற்கு அப்பால் அவ்வாறானதொரு செயற்பாடு நடைபெறுமாக இருந்தால் மீண்டும் கோட்டபாய ராஜபக்சவின் அரசு ஆட்சி பீடம் ஏறும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த பேச்சுக்கள் எல்லாம் வழக்குகள் எல்லாம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் மேற்கொண்டுவந்ததால் அதில் ஒருசில வழக்குகளில் வெற்றியும் கண்டுள்ளார்.

**இவ் விடயங்கள் அனைத்தும் அரசாங்கத்திற்கு தீனி போடுவதாகவே அமையப் பெற்றிருந்தது. தமிழ் அரசியல் தலைமைகளால் சுமந்திரன் அவர்கள் ஒரு துரோகியாக பார்க்கப்பட்டாலும் தென்னிலங்கை அரசியலில் சுமந்திரனின் வாத பிரதிவாதங்கள் வல்லமையானதாகவே அமையப் பெறுகின்றன.**

**எது எவ்வாறாக இருப்பினும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் என்ற வகையில் சில விடயங்களை அரசியல் அனுபவத்தினூடாகவே கொண்டு செல்ல வேண்டும்.**

ஆகவே சுமந்திரனின் எரிச்சலான நடவடிக்கைகள் தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய அரசியல் செயற்பாடுகளை எதிர்வரும் காலங்களில் குழிதோண்டி புதைப்பதாயின் சிங்கள பேரின வாதிகளுக்கு தீனி போடுவதாகவே அமையும் என அரசியல் விமர்சனர்கள் விமர்சனம் தெரிவித்துள்ளனர்.

சுழியோடி

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு




## கொரோனா அச்சத்தில் உலகநாடுகள்: சத்தமில்லாமல் விண்ணிற்கு ரொக்கெட் அனுப்பிய சீனா

சீனாவில் ஆரம்பித்து தற்போது உலகின் பலநாடுகளிலும் ருத்ரதாண்டவம் ஆடிவருகின்றது கொரோனா.எனினும் தற்போது சீனாவில் இதன் பாதிப்பு பெருமளவில் குறைந்துள்ளது.

இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சீனா பல்வேறு வெளிநாட்டு முதலீடுகளைச் செய்வதில் ஆர்வம் காட்டி வந்தது.அதேபோன்று நேற்றைய தினம் ரொக்கெட் மாதிரி ஒன்றினை விண்வெளிக்கு அனுப்பி பரிசோதனை முயற்சி ஒன்றினையும் மேற்கொண்டுள்ளது.

விண்வெளி வீரர்களை நிலவிற்கு அனுப்பும் முயற்சியாகவே இப் பரீட்சிப்பு இடம்பெற்றுள்ளது. Long March 5B எனும் இந்த ரொக்கெட் ஆனது Wenchang ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதில் இணைக்கப்பட்டுள்ள மீண்டு வரக்கூடிய கப்சூல் (capsule) பகுதியானது எதிர்பார்த்ததைப் போன்று வெற்றிகரமாக ரொக்கெட்டிலிருந்து பிரிந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு நிலவிற்கு விண்வெளி வீரர்களை அனுப்புவதற்கு சீனா எதிர்பார்த்துள்ளமை தெரிந்ததே.



## டுவிட்டரின் புதிய முயற்சி

முன்னணி சமூகவலைத்தளங்களுள் ஒன்றான டுவிட்டர் ஆனது ஒரு தசாப்த காலத்தினைக் கடந்தும் மில்லியன் கணக்கான பயனர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.இப்படியிருக்கையில் தற்போதைய வடிவமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தி புதிய வடிவமைப்பினை தருவதற்கு அந்நிறுவனம் எதிர்பார்க்கின்றது.



இதற்கான அறிவிப்பினை Twitter Support கணக்கின் ஊடாக வெளியிட்டுள்ளது. இதன்படி IOS சாதனங்களுக்கான அப்பிளிக்கேஷன் மற்றும் டுவிட்டர் இணைப் பக்கத்தில் இந்த மாற்றத்தினை கொண்டுவர திட்டமிட்டுள்ளது. உரையாடல்களை வாசித்தல் மற்றும் பின்தொடர்தல் என்பவற்றினை இலகுபடுத்துவதற்காக இம் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது.

இவ் மாற்றமானது ஏற்கனவே சில பயனர்களிற்கு வழங்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம் மாற்றம் எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும் என்பதை GIF கோப்பு ஒன்றினூடாகவும் விளக்கியுள்ளது. இதனை Twitter Support பக்கத்தில் காண முடியும்.

## பள்ளி மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தும் அளவு அதிகரிப்பு

தற்போதைய லொக்டவுன் நிலைமை காரணமாக பள்ளி செல்லும் மாணவர்கள் இணையத்தினை பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.



இதன்படி இந்த எண்ணிக்கையானது 38 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவர்களில் அனேகமானவர்கள் 15 வயது அல்லது அதிலும் குறைந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லொக்டவுன் காலத்தில் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில் ஒன்லைன் மூலமாக வழங்கப்படும் பாடநெறிகளில் கலந்துகொள்வதற்கே அதிகமான மாணவர்கள் இணையத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர். அதுமாத்திரமன்றி பொழுபோக்கு அம்சங்களுக்காகவும் இணையம் பயன்படுத்தப்படுவது அதிகரித்துள்ளது. இவை தவிர ஒன்லைன் பணப்பரிமாற்றம், மின்வணிகம், மின் மருத்துவம் போன்றவற்றினாலும் இணையப்பாவனை வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொற்றுக் கொல்லி சாயங்கள்!

மருத்துவமனைகளில் மேஜைகள், இருக்கைகள், சுவர்களுக்கு வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை கொல்லும் திறனுள்ள சாயங்கள் வந்துவிட்டன.

ஜப்பானை சேர்ந்த 'நிப்பான்' நிறுவனம், அமெரிக்காவை சேர்ந்த, 'கார்னிங்' நிறுவனம் ஆகியவை கூட்டாக உருவாக்கியுள்ள இந்த பெயின்ட், சோதனைகளில், நுரையீரலைத் தொற்றிக்கொள்ளும் சில வைரஸ்களை 99.9 சதவீதம் அழிக்கும் திறன் கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜனவரியில் நடந்த சோதனைக்குப் பிறகு, அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை, நிப்பான்-கார்னிங் சிறப்பு பெயின்டுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அண்மையில், கொரோனா தொற்று பரப்பும் மையமாக இருந்த சீனாவின் வூஹான் நகரில் நான்று மருத்துவமனைகளுக்கு நிப்பான் -கார்னிங்கின் வைரஸ் எதிர்ப்பு சாயங்கள் நல்கையாக வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் கூடும் பல இடங்களில் இந்த தொற்றுக்கொல்லி சாயங்களை பூசலாம்.




**கொரோனா தாக்குதலின் விளைவாக உருவாகி வரும், புதிய உலக ஒழுங்கு, இணையம் மூலம் அலுவல் பணி, மெய்நிகர் சந்திப்புகள், டிஜிட்டல் வகுப்பறைகள் போன்றவற்றை சகஜமாக்கிவிடும்.**

கிரண் மஜீம்தார் ஷா
நிறுவனர்,
பயோகான்








## இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஆஷஸ் தொடர்

கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மீண்டு வரும் மக்களுக்குப் பரபரப்பை ஏற்படுத்தும் வகையில், இந்தியா - பாகிஸ்தான், ஆஷஸ் தொடர்களை நடத்தலாம் என அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் பிராட் ஹொக் யோசனை முன்வைத்துள்ளார்.

இதேவேளை,உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான போட்டிகளை நிறுத்திவிடலாம் எனவும் அவர் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான இந்தியா மற்றும் அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நீக்கப்பட வேண்டும். சிறிது காலத்துக்கு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான தொடர்களை நிறுத்தி வைக்கலாம்.

கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மீண்டு வரும் மக்களுக்குப் பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் இந்தியா - பாகிஸ்தான், ஆஷஸ் தொடர்களை நடத்தலாம். சவாலான போட்டிகளைப் பார்க்க இரசிகர்கள் விரும்புகிறார்கள்.

இந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் 2 டெஸ்டுகள் இந்தியாவிலும் 2 டெஸ்டுகள் பாகிஸ்தானிலும் நடைபெற வேண்டும். பல ஆண்டுகளாக இந்தியா - பாகிஸ்தான் தொடர் நடைபெறவேயில்லை. மக்கள் இத்தொடருக்காக ஏங்குகிறார்கள்' என கூறினார்.

## 2021ஆம் ஆண்டு ஆஸி பகிரங்க டென்னிஸ்சை எதிர்பார்க்கும் நடால்

நடப்பு ஆண்டு டென்னிஸ் போட்டிகள் நடைபெறும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லையென்பதால், 2021ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரை அதிக அளவில் எதிர்பார்த்திருப்பதாக ஸ்பெயினின் முன்னணி டென்னிஸ் வீரரான ரபேல் நடால் தெரிவித்துள்ளார். உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, அனைத்து டென்னிஸ் போட்டிகளும் இரத்து அல்லது ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதனால் டென்னிஸ் சங்கங்கள் வருவாய் இல்லாமல் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன. அத்துடன் வீரர்களுக்கு ஊதியமும் தடைபடுகின்றது. இந்த நிலையில் தனது டென்னிஸ் விளையாட்டின் அடுத்த கட்ட நகர்வு குறித்து, நடால் கருத்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "டென்னிஸ் போட்டிகள் முடிந்த அளவிற்கு விரைவாக தொடங்கும் என நம்புகிறேன். ஆனால், ஒவ்வொரு வாரமும் ஒரு இடத்தில் இருந்து மற்ற இடத்திற்கு செல்வது, ஹோட்டலில் தங்குவது, விமான நிலையம், மற்ற பகுதிகளுக்கு செல்வது குறித்து யோசிக்கிறேன்.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் வழமை நிலைக்கு திரும்பி போட்டிகளை வழக்கம்போல் நடத்தலாம் என்று உத்தரவாதம் கொடுத்தால் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட தயாராக இருக்கிறேன். 2021ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் டென்னிஸ் தொடர்களை காட்டிலும் அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரை அதிக அளவில் எதிர்பார்க்கிறேன். 2020ஆம் ஆண்டை இழந்து விட்டதாக பார்க்கிறேன்" என கூறினார். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடர் செய்யப்பட்டுள்ளது. பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. டென்னிஸ் உலகில் 'கிளே ஒஃப் த கிங்' என வர்ணிக்கப்படும் 33 வயதான ரபேல் நடால், இதுவரை 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## ரொனால்டினோ கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்

பிரேஸில் கால்பந்து அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான ரொனால்டினோ, மெஸ்ஸியை விடவும் சிறந்தவர் என அர்ஜென்டீனா கால்பந்து அணியின் முன்னாள் வீரரும், பயிற்சியாளருமான மார்டின் கார்டெட்டி தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரில் யார் சிறந்தவர் என மார்டின் கார்டெட்டியிடம் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

'நான் ஒரு பயிற்சியாளராக மெஸ்ஸியை விடவும், எனது அணியில் ரொனால்டினோவை தெரிவுசெய்வேன். ரொனால்டினோவுடன் ஒருவருட காலப்பகுதியை பகிர்ந்துக்கொண்டேன். அவர் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்.

குதுகலமாக பயற்சிகளில் ஈடுபடுவார். அத்துடன், புதிய பல விடயங்களையும் பயிற்சியின் போது கற்றுக்கொள்வார். அதனை மைதானத்தில் வைத்து வெளிப்படுத்துவார். பயிற்சியிலும், போட்டியிலும் அவர் பந்தை நகர்த்தும் விதங்கள், ஏனையவர்களிடமிருந்து அவரை தனிமைப்படுத்துகின்றது.

கால்பந்து வரலாற்றில் ரொனால்டினோ போன்ற வீரரை அதிகமாக ஞாபகப்படுத்திக்கொள்ள முடியும். அவருடன் சக வீரராக விளையாடியமை பெருமையளிக்கிறது' என கூறினார். பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரொனால்டினோ மற்றும் மார்டின் கார்டெட்டி ஆகியோர் இணைந்து விளையாடியிருந்தனர். இந்த அனுபவத்தை கொண்டே அவர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

40 வயதான ரொனால்டினோ, 1999ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரை பிரேஸில் அணிக்காக 97 போட்டிகளில் விளையாடி 33 கோல்களை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## சீனாவுக்கு வடகொரிய தலைவர் வாழ்த்து: தென்கொரியாவையும் கடுமையாக விமர்சித்தது!

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் சீனா சிறப்பாக செயற்பட்டதற்காக, வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன், சீனாவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கிற்கு அனுப்பிய தனிப்பட்ட செய்தியிலேயே வடகொரிய தலைவர் இதனைத் தெரிவித்தார். அத்துடன், அச்செய்தியில் தென்கொரியாவின் ஆத்திரமூட்டும் சமீபத்திய இராணுவப் பயிற்சிகள் குறித்தும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. கொரிய மத்திய செய்தி நிறுவனத்தின் (கே.சி.என்.ஏ) அறிக்கையின்படி, 'சமீபத்திய தென் கொரிய இராணுவ பயிற்சிகள் ஒரு கடுமையான ஆத்திரமூட்டல்' என்று வட கொரிய இராணுவ பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மேலும், 'சமீத்திய நடவடிக்கை விழித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இது எதிரிகள் எப்போதுமே எதிரிகளாகவே இருக்கிறார்கள் என்ற வெளிப்படையான உண்மைக்கு மீண்டும் நம்மை அழைத்துச்சென்றது' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கொரியா குடியரசு விமானப்படை (ROKAF) ஏயார் காம்பாட் கொமாண்ட், அன்று முன் தினம் (புதன்கிழமை) மேற்கொண்ட இராணுவப் பயிற்சியை மேற்கோளிட்டுள்ள வட கொரியா, இராணுவப் பதற்றங்களைக் குறைக்கும் நோக்கில் கொரியர்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களை, இந்த பயிற்சிகள் மீறியுள்ளது எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது.



## அமெரிக்க துணை ஜனாதிபதியின் அலுவலருக்கு கொரோனா வைரஸ் தொற்று!

அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸின் உயர்மட்ட உதவியாளருக்கு, கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

துணை ஜனாதிபதி மைக் பென்ஸின் ஊடகச் செயலாளர் கேட்டி மில்லருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது அன்று (வெள்ளிக்கிழமை) உறுதி செய்யப்பட்டதாக, வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அத்துடன், பென்ஸ் மற்றும் ட்ரம்ப் ஆகியோருக்கான தினசரி சோதனைகள் இடம்பெற்றுவருவதாகவும், ஜனாதிபதியைப் பாதுகாக்க ஒவ்வொரு முன்னெச்சரிக்கையை எடுத்துவருவதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையின் மற்றொரு உறுப்பினருக்கு, (ஜனாதிபதி ட்ரம்பின் உதவியாளர்) வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்ட அடுத்த நாளில் இவருக்கும் வைரஸ் தொற்று இருப்பதனால் ஏனைய அதிகாரிகள் அச்சமடைந்துள்ளனர்.

25 வயதான கேட்டி மில்லரின் கணவர் ஸ்டீபன் மில்லர், ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் என்பது குறிப்பிடத்தக்கது. உலகிலேயே அதிகமான கொரோனா வைரஸ் பாதிப்பை சந்தித்துள்ள அமெரிக்காவில், இதுவரை 78 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். 13 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## அர்ஜென்டினாவில் கட்டாய தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் நீடிப்பு – ஜனாதிபதி ஆல்பர்டோ பெர்னாண்டஸ்

அர்ஜென்டினா தலைநகர் ப்யூனோஸ் அயர்ஸில், கொரோனா வைரஸ் தொற்று பரவல் சமூக தடுப்பு மற்றும் கட்டாய தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை, எதிர்வரும் மே 24ஆம் திகதி வரை நீடிப்பதாக, அர்ஜென்டினா ஜனாதிபதி ஆல்பர்டோ பெர்னாண்டஸ் அறிவித்துள்ளார். ஆனால், நாட்டின் பிற இடங்களில் கொரோனா வைரஸின் பரவலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட கட்டுப்பாடுகளை தளர்த்தினார்.

தொலைக்காட்சி உரையில் இந்த அறிவிப்பினை வெளியிட்ட ஜனாதிபதி ஆல்பர்டோ பெர்னாண்டஸ், இந்த முடக்கம் தலைநகரத்திலும் அதன் புறநகரிலும் இருக்கும் என தெரிவித்தார். அத்துடன், கடுமையான சமூக தனிமை நடவடிக்கைகளை பின்பற்றியதற்காக. அர்ஜென்டினாவை எண்ணி மிகவும் பெருமைப்படுவதாகவும் பெர்னாண்டஸ் கூறினார். கொரோனா வைரஸ் பரவியதையடுத்து, அர்ஜென்டினாவில் கடந்த மார்ச் 20ஆம் திகதி நாடு முழுவதும் கட்டாய கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன்பிறகு எதிர்வரும் மே 10ஆம் திகதி வரை நீடிப்பதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

தற்போது கொரோனா வைரஸ் தொற்றுவீதம் குறையாததால், அன்று (ஞாயிற்றுக்கிழமை) முடிவுக்கு வரவிருந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேலும் 14 நாட்களுக்கு நீடிப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். நாட்டில் இதுவரை 5,611பேர் வைரஸ் தொற்றுக்கு பாதிக்கப்பட்டுள்ளதோடு, 293பேர் உயிரிழந்துள்ளனர். 1,659பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதனை அர்ஜென்டினாவின் சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.




## அவுஸ்ரேலியாவின் மிகப்பெரிய மாநிலங்கள் கட்டுப்பாடுகளை தளர்த்துவதிலிருந்து பின்வாங்கல்!

அவுஸ்ரேலியாவில் நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளை, உத்தேசித்த காலகட்டத்திற்கு முன்பே தளர்த்துவதற்கு அவுஸ்ரேலியா அரசாங்கம் தீர்மானித்திருந்த நிலையில், அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள், கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் இருந்து பின்வாங்கியுள்ளன.

சில மாநிலங்கள் சிறிய ஒன்றுகூடல்களை அனுமதித்ததோடு, வணிகங்களை மீண்டும் திறப்பதற்கான மத்திய அரசின் மூன்று கட்ட திட்டத்திற்கு ஏற்ப உணவகங்களைத் திறக்கத் தயாராகியுள்ளன.

பிரதமர் ஸ்கொட் மோரிசன், ஜூலை மாதத்திற்குள் கிட்டத்தட்ட 1 மில்லியன் மக்களை மீண்டும் பணியில் இணைப்பதற்கான மூன்று கட்ட நடவடிக்கைகளில் பெரும்பாலான தடைகளை அகற்றுவதற்கான திட்டங்களை கோடிட்டுக் காட்டினார்.




இதற்கு, நாட்டில் கொவிட்-19 வைரஸ் தொற்றால் ஒரு நாளைக்கு 20இற்க்கும் குறைவான மக்களே பாதிக்கப்படுவதே ஆகும். இதற்கு முன்னதாக மே 11ஆம் திகதி முதல் சில தளர்வுகளை கொண்டு வரலாம் என அரசாங்கம் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது அந்த திகதியில் மாற்றம் கொண்டுவரப்பட்டு நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் இன்று (சனிக்கிழமை) தளர்த்தப்படவுள்ளன.

அவுஸ்ரேலியாவின் வடக்கு மாகாணங்களில் முன்பே சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அங்கு பூங்காக்கள், நீச்சல் குளம் ஆகியவை திறக்கப்பட்டுள்ளன. தெற்கு அவுஸ்ரேலியா இப்போது உலகின் பாதுகாப்பான இடங்களில் ஒன்றாக கருதப்பட வேண்டும் என சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கொரோனா முடிவுக்கு வந்ததும் பொருளாதாரத்தில் தத்தளிக்கும் நிலையில் உலக நாடுகள் - ஐ.நா. சபை எச்சரிக்கை

கொரோனா முடிவுக்கு வந்ததும் பல நாடுகளும் பொருளாதாரத்தில் தத்தளிக்கும் நிலை ஏற்பட்டு, 26 கோடி மக்கள் பசி, பட்டினி நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.



**உலக உணவு திட்டத்தின் நிர்வாக இயக்குனர் டேவிட் பீஸ்லி கூறியதாவது:-**

கொரோனா முடிவுக்கு வந்ததும் பல நாடுகளும் பொருளாதாரத்தில் தத்தளிக்கும் நிலை ஏற்படும். இந்த ஆண்டு இறுதியில் இதன் நிலைமை மோசமாகும். 26 கோடி மக்கள் பசி, பட்டினி நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

முதலில் அதை தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இதை சரி செய்வதற்கு பணக்கார நாடுகளும், பணக்காரரும், பண வசதி கொண்ட நிறுவனங்களும் தாராளமாக உதவ வேண்டும். விநியோக சங்கிலி அறுந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**ஐ.நா.வின் மனிதாபிமான அமைப்பின் தலைவர் மார்க் லோகாக் இதுபற்றி கூறியதாவது:-**

கொரோனா தொற்றின் உச்சம் இன்னும் 3 முதல் 6 மாதங்களுக்கு நீடிக்கலாம். அப்போது ஏழ்மையான நாடுகளும் கடும் பாதிப்புக்கு ஆளாகும். ஏற்கனவே கொரோனாவால் மக்களுக்கு வருமானம் இல்லை. வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது. உற்பத்தியும் இல்லை. ஏற்றுமதி வருவாய், பணம் அனுப்புதல், சுற்றுலா ஆகியவை முடங்கிவிட்டன.சுகாதார அமைப்புகளும் அழுத்தத்தில் இருக்கின்றன. இதுபோன்ற பிரச்சினைகளால் மக்களுக்குள் மோதல் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. பசி, பஞ்சம், வறுமை, நோய் அதிகரிப்பு போன்றவை ஏற்படும். சாலை போக்குவரத்து தடைகளால் பொருளாதார மந்த நிலை இன்னும் மோசமாகும். இது உலக அளவில் விநியோக சங்கிலியை முறித்துவிடும். பசி, பட்டினி போன்றவற்றால் மக்களிடையே மோதல் ஏற்பட்டு அது கொந்தளிப்புகளையும் உருவாக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. அது கட்டுப்படுத்த முடியாத நிலைக்கும் செல்லலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஒரு தடவை நபி மூஸா அலைஹி வஸல்லம் அவர்கள்



ஒரு தடவை நபி மூஸா அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடம் கேட்டார் , யா அல்லாஹ் நீ என்னை உன்னுடன் நேரடியாக பேசவைப்பதன் மூலம் கௌரவப்படுத்தினாய்..இது போன்ற பாக்கியத்தை வேறு எவருக்கேனும் கொடுத்ததுண்டா? என கேட்டார்.அதற்கு அல்லா/ஹ தஆலா , மூஸாவே! இறுதி காலப்பகுதியில் நான் முஹம்மதின் (ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம்) கூட்டத்தினரை அனுப்புவேன். அவர்கள் காய்ந்த உதடுகளுடனும் வரண்ட நாவுடனும், மெலிந்து கண்கள் குழி விழுந்த தோற்றத்துடனும் இருப்பதோடு, வயிற்றில் பசியுடன் என்னை துஆ மூலமாக அழைப்பார் அவர்கள் தான் அதிகம் அதிகம் எனக்கு நெருக்கமானவர்கள்.

மூஸாவே! உங்களுக்கும் எனக்கும் மத்தியில் 70,000 தடுப்புக்கள் இருந்தன.ஆனால் இஃப்தார் நேரத்தில் எந்த ஒரு தடுப்பும் எனக்கும் நபி முஹம்மதின் (ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம்) உம்மத்திற்கும் இருக்காது.

மூஸாவே! இஃப்தார் நேரத்தில் நோன்பாளியின் துஆ நிராகரிக்கப்படாது, அதற்கான பொருப்பை நானே ஏற்கிறேன் என்றான்.

ஸுப்ஹானல்லாஹ்!!!இந்த ஹதீஸை அதிகம் அதிகம் பகிரவும்..

தயவு செய்து மகத்துவம் மிக்க கண்ணியப்படுத்தப்பட்ட நோன்பு திறக்கும் நேரத்தை வீணாக பேசி கழிக்காமல் இறைவனை பொருத்தத்தை அடைய முயற்சி செய்வீர்.
ஆமீன்... அப்துல் முத்தலிப்

# அன்னையர் தினம் எப்படி உருவாகியது ?

அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா மரியா ஜீவ்ஸ் ஜர்விஸ் என்பவரின் மகள் அன்னா மேரி ஜர்விஸ். தனது அம்மாவின் உந்துதலின் பேரில் அமெரிக்காவில், குழந்தை இறப்பு விகிதத்தை குறைக்க முயற்சிகள் மேற்கொண்டனர். இதன் ஒரு பகுதியாக "மதர்ஸ் டே ஒர்க் கிளப்" என்ற அமைப்பை உருவாக்கினர். இதன் மூலம் அடிக்கடி மருத்துவர்களை வரவழைத்து, தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்பு, பேணி காத்தல், ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது, எவ்வாறு கல்வி கற்பிப்பது போன்ற பயிற்சிகளை அளித்தார்.




ஒருமுறை தனது தாய் நடத்தி வந்த ஞாயிற்றுக் கிழமை பள்ளியில் போதித்துக் கொண்டு இருக்கும்போது, அன்னையைப் போற்றுவதற்கு ஒரு நாள் "அன்னையர் தினம்" வரும் என்று பாடி இருந்தது அவரது காதுகளிலும், நினைவிலும் வந்து வந்து சென்றது. இந்நிலையில் அவரது அம்மா 1905ஆம் ஆண்டில் இறந்துவிட, அவரது ஆசையை நிறைவேற்றும் நோக்கத்தில், 25 ஆண்டுகள் அவரது அம்மா போதித்து வந்த ஆண்ட்ரூஸ் சர்ச்சுக்கு, 1908, மே 10ஆம் திகதி, அன்னையர்களை வரவழைத்து அவர்களுக்கு பூச்செண்டுகள் கொடுத்து அனுப்பினார்.

அன்றைய தினத்தை அன்னையர் தினமாகவே கொண்டாடினார். அன்னையர் தினத்தை அறிவிக்க வேண்டும் என்று தொடர்ந்து அன்னா மேரி போராட்டம் நடத்தி வந்த நிலையில், அமெரிக்காவின் 28 வது அதிபரான தாமஸ் வுட்ரூ வில்சன், அன்னையர் தினத்துக்கான பிரகடனத்தில் 1914, மே 9 ஆம் திகதி -கையெழுத்திட்டார். இதையடுத்து, அன்னையர்களுக்கு மரியாதை, அன்பு செலுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மே 2வது ஞாயிறு அன்னையர் தினமாக கொண்டாடப்படும், அன்று தேசிய விடுமுறை விடப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்தது.அப்படி பிறந்தது தான் அன்னையர் தினம்.

**இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 10.05.2020 அன்று வெளியிடப்பட்டது.**